மலர் 3 • இதழ் 4 • ஆகஸ்ட் 2018 • ரூ.15/-

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## குழந்தைகளை முடிவெடுக்க விடுங்கள்!

## ஆசிரியர் என்பவர் வழிகாட்டி!





ஒரு வேளை
மிஸ் பண்ணினாலும்...
பீல் பண்ணணும்.........
அதுதான் சக்தி மசாலா !
I FOOD
சக்தி மசாலா ...
அன்பின் சுவையான
அடையாளம் ...
SAKTHI
SAKTHI
KULAMBU CHILLI POWDER
SAKTHI
SAMBAR POWDER
சக்தி
மசாலா
சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு – 638 004.
போன் : 0424 – 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com
SAKTHI
Refined Sunflower Oil
SAKTHI
CUT MANGO PICKLE
• சக்தி மசாலா சமையல் பொடி வகைகள் • சக்தி ஊறுகாய் வகைகள் • சக்தி சன் பிளவர் ஆயில் • சக்தி பருப்பு வகைகள்
• சக்தி பஜ்ஜி போண்டா மாவு • சக்தி ராகி மாவு • சக்தி கடலை மாவு • சக்தி அப்பளம் • நெய்

ENGINEERING ARCHITECTURE DENTAL RESEARCH ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






**COURSES AVAILABLE**

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

## SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

Email: entranceexam2016@sathyabamauniversity.ac.in | www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344



# இயற்கை தந்திருக்கும் கால அவகாசம்!

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

காவிரி நதி நீரை மையப்படுத்தி தமிழகம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களிலும் பதற்றம் ஏற்பட்டு, பிரிவினைத் தீ எரிந்துகொண்டிருந்த நேரத்தில், இயற்கை அன்னையின் கருணை மழை அதை தணித்திருக்கிறது. உச்ச நீதிமன்றம், காவிரி நடுவர் மன்றம் போன்ற நடுநிலை அமைப்புகளின் உத்தரவுகள் காற்றில் பறந்து, புதிதாக அமைக்கப்பட்ட காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவும் அப்படி ஆகிவிடுமோ என்ற கவலையில், பல லட்சம் விவசாயிகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகி இருந்தது. இந்த நேரத்தில் கர்நாடகாவில் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்த பருவமழையின் காரணமாக அணைகள் நிரம்பி, காவிரியில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

பல ஆண்டுகளாக வறண்டிருக்கும் காவிரியைப் பார்த்து நொந்து போயிருந்த மக்களுக்கு, காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது பெருமகிழ்வைத் தந்திருக்கிறது. சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், நாகை, கடலூர், புதுக்கோட்டை ஆகிய 12 மாவட்டங்களில் காவிரிக் கரையோர விவசாய நிலங்கள் உயிர் பெற்று பசுமை பூக்கத் தொடங்கி இருக்கின்றன.

தமிழகத்தின் மொத்த விவசாய நிலப்பரப்பு 63 லட்சம் ஹெக்டேர் என்கிறார்கள். இதில் 55.7% நிலப்பரப்பு முழுக்க நிலத்தடி நீர் மற்றும் நீர்நிலைகள் சார்ந்த விவசாயம் நடைபெறுகிறது. விவசாய பம்பு செட், கிணறுகள், ஏரிகள், குளங்கள் போன்றவை மூலம் கிடைக்கும் நீர் ஆதாரத்தைக் கொண்டு தமிழகத்தில் விவசாயம் நடைபெறுகிறது. தமிழகத்தில் பெய்கிற மழையை எதிர்பார்த்து நடக்கிற விவசாயம் இது. வடதமிழ்நாட்டுப் பகுதிகளில் நடைபெறுகிற விவசாயம் பெரும்பாலும் 'வானம் பார்த்த விவசாயம்'தான். மழையை நம்பி பயிரிடுவார்கள். பெய்தால் லாபம்; பொய்த்தால் போச்சு!

மற்ற நிலப்பரப்புகளில் ஆற்றுநீர்ப் பாசனத்தை நம்பியிருக்கிறார்கள் விவசாயிகள். அதிலும் காவிரி ஆற்றின் நீரை நம்பி பல நூற்றாண்டுகளாக இருக்கிறார்கள் டெல்டா விவசாயிகள். தமிழகத்தின் உணவு உற்பத்தியில் காவிரி நீரின் பங்கும் கணிசமானது.

ஒவ்வொரு ஆண்டும் பருவமழை குறையும் போது இரண்டு மாநிலங்களுக்கும் பிரச்னை தீப்பற்றி எரிகிறது.



முதலில் 205 டி.எம்.சி தண்ணீர் தர வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை கர்நாடக அரசு அமல்படுத்த மறுத்தது. உச்ச நீதிமன்றத்தை நாடிய நிலையில், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பில் இந்த அளவு, 192 டி.எம்.சியாகக் குறைக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் இதை 177.25 டி.எம்.சியாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த நீண்ட நெடிய நீதிப் போராட்டங்கள் நடைபெற்ற காலகட்டத்திற்குள் ஏறத்தாழ 10 லட்சம் ஏக்கர் அளவுக்கு விவசாயம் குறைந்திருப்பதாக சொல்கின்றனர் நிபுணர்கள். இதனால், விவசாயத்தை நம்பியிருந்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள், நகரங்களை நோக்கி வேலைவாய்ப்பைத் தேடி புலம்பெயர்ந்திருக்கிறார்கள்.

நிலைமை மேலும் மோசமடைவதற்குள் இயற்கை நம்மை தற்காலிகமாக காப்பாற்றி இருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இப்போதுதான், காவிரி டெல்டா விவசாயிகளுக்குத் தண்ணீர் தருகிற மேட்டூர் அணை முழுமையாக நிரம்பியிருக்கிறது. வாராது வந்த மாமணியை வரவேற்பது போல, கைகள் கூப்பி, கண்ணீர் மல்க காவிரி நீரை வரவேற்கின்றனர் விவசாயிகள். தேவையான நீர் கிடைத்துவிட்டது என்று காவிரிப் பிரச்னையை ஒத்திப் போட்டுவிடாமல், இரண்டு மாநில அரசியல் தலைவர்களும் மக்களின் துயரை நிரந்தரமாகத் தீர்க்க முன்வர வேண்டும். இயற்கை தந்திருக்கிற இந்த கால அவகாசத்தை தப்பித்துக்கொள்ளும் கால அவகாசமாகப் பயன்படுத்திக் கொள்ளாமல், விவசாயிகள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும்.

அன்புடன்,

**சூர்யா**


AGARAM FOUNDATION

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 3 • இதழ் 4

ஆகஸ்ட் 2018

கௌரவ ஆசிரியர்

**திரு.சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

10/55, ராஜு தெரு,

மேற்கு மாம்பலம்,

சென்னை - 600 033

தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com

# குழந்தைகளை முடிவெடுக்க விடுங்கள்!



டிரைவிங் கற்றுக்கொள்வதற்காக போகிறீர்கள். காரில் உங்களோடு வரும் பயிற்சியாளர், அவரே ஸ்டியரிங்கை பிடித்து ஓட்டுகிறார்; அவரே காரை இயக்குகிறார்; கியர் போடுகிறார்; பிரேக் பிடிக்கிறார். நீங்கள் வெறும் பார்வையாளராக மட்டுமே அருகில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களால் டிரைவிங் கற்றுக்கொள்ள முடியுமா? உங்கள் கைக்கு ஸ்டியரிங் வராமல், வேகத்தை அதிகரிப்பதா அல்லது குறைப்பதா என நீங்களாக முடிவுகள் எடுக்காமல், உங்களால் டிரைவிங் கற்றுக்கொள்ள முடியாது. எனில், 'குழந்தைகளை மட்டும் அவர்களின் கல்வி விஷயத்தில் அவர்களையே முடிவுகளை எடுக்க விடாமல் தடுக்கிறீர்களே, ஏன்?' என்ற கேள்வியை எழுப்புகிறார்கள் கல்வியாளர்கள்.

குழந்தைகள் பள்ளிக்குப் போக ஆரம்பிக்கும் மூன்றரை வயதிலேயே, அவர்களின் சார்பாக ஏராளமான முடிவுகளை எடுக்க ஆரம்பித்துவிடுகிறார்கள் பல பெற்றோர்கள். காலையில் என்ன படிப்பது, மாலையில் எப்போது ஹோம் ஒர்க், எந்தெந்த பாடங்களுக்கு டியூஷன், விடுமுறை நாட்களில் என்னென்ன கோச்சிங் கிளாஸ் என டைம் டேபிள் போட்டுவிடுகிறார்கள். பள்ளியில் ஒரு டைம் டேபிள், வீட்டில் ஒரு டைம் டேபிள்... இந்த இரண்டுக்கும் இடையில்தான் தங்கள் இயல்பான விளையாட்டுகளுக்கு நேரம் தேடிக்கொள்கிறார்கள் குழந்தைகள்.

இந்தத் தலைமுறைக் குழந்தைகள் அளவுக்கு பாக்கியசாலிகள் யாருமில்லை. அவர்களுக்கு எல்லாவற்றுக்கும் வழிகாட்ட ஏராளமான வாய்ப்புகள் இப்போது இருக்கின்றன. குழந்தைக்கு கணக்கு சரியாக வரவில்லையா? அந்த ஏரியாவிலேயே சிறந்த கணித ஆசிரியரை வீட்டுகே வரவழைத்து ஹோம் டியூஷன் ஏற்பாடு செய்துகொள்ளலாம். சின்னச்சின்ன சந்தேகங்களுக்கு கூகுளில் விடை தேடிக்கொள்ளலாம். யூ டியூபை திறந்தால், ஸ்டெப் பை ஸ்டெப்பாக கணக்கு சொல்லித் தருகிறார்கள், இணைய ஆசிரியர்கள். இதைத் தவிர பள்ளியில் தனியாக ஸ்பெஷல் கோச்சிங் ஏற்பாடு செய்து தருகிறார்கள்.

குழந்தைகள் வளர வளர, இந்த உதவிகளும் அதிகரித்துவிடுகின்றன. எல்லா நுழைவுத் தேர்வுகளுக்குமான கோச்சிங் சென்டர்கள், பல பள்ளிகளுடன் ஒப்பந்தம் போட்டு பாடம் எடுக்கின்றன. மாதிரித் தேர்வுகள் ஏராளமாக நடத்தப்படுகின்றன. ஒரு நீட் தகுதித் தேர்வை எழுதுவதற்கு முன்பாக, அதேபோன்ற நூறு மாதிரித் தேர்வுகளை எழுதிப் பார்க்கும் மாணவர்கள் இப்போது நிறைய பேர். இதனால் தினம் தினம் எழும் மன அழுத்தம் அவர்களைப் பெருமளவில் பாதிக்கின்றது. ஒரு பாடத்தில் ஒரே ஒரு மார்க் குறைந்தாலும், பெற்றோரையும் பதற்றம் தொற்றிக்கொள்கிறது. தூக்கம் குறைந்து, ஆரோக்கியமாக சாப்பிட முடியாமல், குடும்பமே தவித்துப் போகிறது.

இது சரியா? தாங்கள் என்ன படிக்க வேண்டும்

என்பதை குழந்தைகள் முடிவு செய்ய அனுமதிக்காமல், எவ்வளவு நேரம் படிக்க வேண்டும் என்பதையும் முடிவெடுக்க விடாமல், பெற்றோரே முடிவுகளை அவர்கள்மீது திணிக்கலாமா?

சென்ற தலைமுறைக் குழந்தைகளுக்கு நிறைய வழிகாட்டிகள் இல்லை. முக்கியமாக கூகுள் இல்லை. அவர்களுக்கு நிறைய நேரம் இருந்தது; நிறைய விளையாடினார்கள்; நிறைய நேரம் வீட்டுக்கு வெளியில் இருந்தார்கள்; பல விஷயங்களை அவர்கள் பார்க்க முடிந்தது. அவற்றிலிருந்து நிறைய கேள்விகள் அவர்களுக்குள் எழுந்தன. பெற்றோரிடம் கேள்விகள் கேட்டார்கள்; ஆசிரியர்களிடம் கேட்டார்கள்; அக்கம்பக்கத்தினரிடம் கேட்டார்கள். கிடைத்த பதில்கள், அவர்களை சிந்திக்கவும் தூண்டின.

இன்றைய வீடுகளில் இதற்கான வாய்ப்புகள் இல்லை. எல்லா கேள்விகளுக்கும் தொழில்முறை நிபுணர்களிடமிருந்து பதில்கள் கிடைத்துவிடுகின்றன. இணைய வல்லுனர்கள், டியூஷன் மாஸ்டர்கள், கோச்சிங் சென்டர்களில் இருக்கும் ஆசிரியர்கள் என எல்லோருமே முழுமையான பதில்களைத் தருகிறார்கள். ஆனால், இது குழந்தைகளின் தேடலைக் குறைத்துவிடுகிறது. எல்லாவற்றுக்கும் முழுமையாக யாரோ ஒருவரைச் சார்ந்திருக்கும் நிலைக்கு குழந்தைகள் தள்ளப்படுகிறார்கள். இதனால் சுயமாக எதையும் செய்யும் திறனை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். தங்கள் பிரச்னைகளைத் தீர்க்க வழிதேடாமல், யாரோ ஒருவரின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இது அவர்களின் அடையாளம், தனித்துவம், தன்னம்பிக்கை என எதையும் வளரவிடாமல் செய்கிறது. ஏற்கனவே புரோக்ராம் செய்யப்பட்ட ஒரு கம்ப்யூட்டர் போல அவர்களின் மூளை ஆகிவிடுகிறது.

'The Self-Driven Child' என்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதிய William Stixrud மற்றும் Ned Johnson ஆகிய இருவரும், ''குழந்தைகளுக்கு அவர்கள் வாழ்க்கை குறித்த முடிவெடுக்கும் உரிமையை அதிகம் கொடுக்க வேண்டும். அது அவர்களுக்கு சுதந்திர உணர்வைத் தருவதுடன், மன உளைச்சலையும் தடுக்கும்'' என்கிறார்கள். ''தங்கள் கல்வி தொடர்பான முடிவுகளை அவர்கள் எடுக்க முடியும்போது, தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தீர்மானிப்பது குறித்த பெருமிதம் அவர்களுக்கு ஏற்படும். 'தங்கள் பிரச்னைகளைக் கேட்க யாருமே இல்லை' என்ற ஆதரவற்ற நிலையே பல குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. சுயமாக முடிவுகளை எடுக்கும்போது, மூளை அதிலிருந்து நிறைய கற்றுக்கொள்கிறது. கடினமான சூழல்களில்கூட சரியான முடிவுகளை எடுக்கும் பக்குவம் வருகிறது. இதனால் குழந்தைகள் ஊக்கம் பெறுகிறார்கள்'' என்று இந்த இருவரும் சொல்கிறார்கள்.

குழந்தைகளை எதையும் வற்புறுத்திச் செய்யவைப்பது சரியான அணுகுமுறை அல்ல! ''இதைச் செய்யவில்லை என்றால் விளையாட விட மாட்டேன்'' என்றெல்லாம் நிபந்தனைகள் விதிப்பதும், திட்டுவதும், மிரட்டுவதும் நிரந்தரத் தீர்வுகள் அல்ல. குழந்தைகள் வளர வளர, இந்த பயமுறுத்தல் அஸ்திரங்கள் உங்கள் கைகளிலிருந்து காணாமல் போய்விடும். குழந்தைகள் விரும்பாத ஒன்றை, அவர்களைக் கட்டாயப்படுத்தி செய்ய வைப்பதும் முடியாது; குழந்தைகள் விரும்பும் ஒன்றை அவர்களைச் செய்யவிடாமல் தடுப்பதும் சாத்தியமில்லை.

நம் குழந்தைகள்மீது நம்மைவிட அதிக அக்கறை கொண்டவர்களும் அன்பு காட்டுபவர்களும் வேறு யாரும் இருக்கமுடியாது. ஆனால், ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு எது சரியானது என்பதை எல்லா நேரங்களிலும் தீர்மானிக்கும் உரிமையை பெற்றோர்கள் எடுக்க முடியாது; அப்படி எல்லா முடிவுகளையும் சரியாக எடுக்கும் அளவுக்கு பெற்றோர்கள் நிபுணர்களும் கிடையாது.

'அப்படியானால், குழந்தைகளிடம் முடிவுகளை எடுக்கச் சொல்லிவிட்டு நான் கைகட்டி வேடிக்கை பார்ப்பதா? அவர்களுக்கு நான் உதவி செய்யவே கூடாதா?' என்ற கேள்வி எழலாம். உதவியோ, ஆலோசனையோ தருவதில் தவறில்லை. 'எது சரி, எது தவறு' என உரையாடலாம். உளவியல் நிபுணர்கள், தங்களிடம் வருபவர்களுக்கு ஆலோசனையும் வழிகாட்டலும் மட்டுமே தருவார்கள். முடிவெடுக்க வேண்டியது, சம்பந்தப்பட்ட நபர்தான். பெற்றோரும் இப்படிப்பட்ட ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் மாற வேண்டும். குழந்தைகளை சுதந்திரமாக விட வேண்டும். அப்போதுதான் யோசிக்கவும், தீர்வு தேடவும், பிரச்னைகளை சமாளிக்கவும், முடிவுகள் எடுக்கவும் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களால் சமாளிக்கமுடியாத ஒரு விஷயத்துக்கு உங்களிடம் வந்து தீர்வுகள் கேட்கச் சொல்லலாம்.

ஞாபகம் இருக்கட்டும்... அனுபவங்களே நல்ல முடிவுகளை எடுக்க வைக்கின்றன; தவறான முடிவுகளிலிருந்தே அனுபவங்கள் கிடைக்கின்றன. ●





கியூபா வகுப்பறை உலகம்

# ஆரம்பக்கல்வி முதல் ஆராய்ச்சிக்கல்வி வரை அனைத்தும் இலவசம்!

படு பயங்கரமான எபோலா வைரஸ் ஆப்ரிக்க நாடுகளை அச்சுறுத்திய 2014–ம் ஆண்டு. 'தொற்றினால் மரணம் நிச்சயம்' என்ற அச்சம் எழுந்ததால், டாக்டர்களே அந்த நாடுகளுக்குச் சென்று சிகிச்சை அளிக்க பயந்தார்கள். அப்போது ஆப்ரிக்க கண்டத்துக்கு முதலில் சென்று இறங்கியது கியூபா நாட்டு டாக்டர்கள்தான். பாகிஸ்தானை வெள்ளம் சீரழித்தாலும், மெக்சிகோவை பூகம்பம் உலுக்கினாலும், கியூப டாக்டர்கள்தான் அவசர கால சிகிச்சை தருவதற்கு முதலில் அங்கு போகிறார்கள்.

'மனிதநேயத்துடன் பணிபுரியும் திறமையான டாக்டர்களை உருவாக்கும் நாடு' என கியூபாவை ஐ.நா புகழ்கிறது. 'கல்வியிலும் சுகாதாரத்திலும் கியூபா அடைந்திருக்கும் மகத்தான முன்னேற்றம், பல ஏழை நாடுகளுக்கு முன்மாதிரி' என உலக வங்கி அறிக்கை தந்திருக்கிறது. வளமான அமெரிக்காவுக்குக் கீழே, வறுமை சூழ்ந்து காணப்படும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் கியூபா தனித்துவமானது. 100 சதவிகிதம் எழுத்தறிவு பெற்ற தேசம் இது. மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரைத் தந்திருக்கிறது அரசு. பல நோய்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. பிரசவத்தின்போது பச்சிளம் குழந்தைகள் இறப்பது இங்குதான் குறைவு; மக்களின் ஆயுளும் அதிகரித்துள்ளது. இந்த எல்லாவற்றுக்கும் காரணம், உலகிலேயே தங்கள் பட்ஜெட்டில் கல்விக்கு அதிக ஒதுக்கீட்டைச் செய்யும் நாடு கியூபாதான். கிட்டத்தட்ட 13 சதவிகிதம்.

60 ஆண்டுகளுக்கு முன்பு கல்வியறிவில் முன்னேறாத நாடாக இருந்த கியூபா, எப்படி இதை சாதித்தது? இதற்கு கியூப கல்விமுறை பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

காலை 6.30 மணிக்கு பள்ளி ஆரம்பித்துவிடும். ஆம், கியூபாவில் காலை 6.30 மணிக்கு பள்ளி ஆரம்பித்து விடும். ஏழு மணியிலிருந்து 8.30 வரை காலை உணவை சாப்பிட்டுவிட்டு சும்மா பேசிக் கொண்டிருக்கலாம். 8.30 மணியில் இருந்து 12.30 வரைக்குமான நான்கு மணி நேரத்தில் மாணவர்கள் மொழி, அறிவியல், கணிதம், கணினி மற்றும் சமூக அறிவியல் பாடங்களைப் படிப்பார்கள். 12.30 மணியிலிருந்து 2.00 மணி வரை உணவு இடைவேளை.

2.00 மணியிலிருந்து 4.00 மணி வரை கலை, இலக்கியம், இசை, ஓவியம், புது விளையாட்டு போன்றவற்றைக் கற்பார்கள். 4.00 மணியிலிருந்து அவர்கள் பெற்றோர் வந்து அழைத்துச் செல்லும்வரை பள்ளியிலேயே விளையாடிக் கொண்டிருப்பார்கள். குழந்தையை கவனிக்க வேண்டும் என்ற காரணத்துக்காக அப்பாவோ அல்லது அம்மாவோ வீட்டில் இருப்பதை கியூப அரசு விரும்பவில்லை. ஆகையால் அந்தப் பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொண்டு, காலை 6.30 மணியிலிருந்து மாலை 6.30 வரை கவனித்துக்கொள்கிறார்கள்.

அந்த 12 மணி நேரத்தில் நிறைய

விளையாட்டு, விளையாட்டு உத்திகள், செறிவான கணித அறிவு படிப்புகள், மனவளம் கொடுக்கும் மொழி படிப்புகள் மற்றும் கலைகளைக் கற்றுத் தருகிறார்கள்.

ஒரு கியூப மாணவர் காலையில் கண்விழித்தால் அவருக்கு பள்ளிக்கு செல்லுதல் என்பது இன்பமளிக்கும் விஷயமாக இருக்க வேண்டும் என்ற இலக்குடன் பாடத்திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள்.

6 வயதிலிருந்து 16 வயது வரை கியூபாவில் கட்டாயம் கல்வி கற்றாக வேண்டும். கியூபக் கல்விமுறையையும் நம் கல்விமுறையையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

1 முதல் 5 வயதுவரை ப்ரீஸ்கூல். இது இந்தியாவின் ப்ரீ கே.ஜி, எல்.கே.ஜி மற்றும் ஒன்றாம் வகுப்புக்கு இணையானது. 6 முதல் 11 வயதுவரை ப்ரைமரி. இது நம் ஊர் நடுநிலைப் பள்ளி போன்றது. 12 வயது முதல் 14 வயதுவரை பேஸிக் செகண்டரி. இது நம் உயர்நிலைப் பள்ளி போன்றது. 15 முதல் 17 வயதுவரை ப்ரீ–யுனிவர்சிட்டி. இது நம் ஊர் பிளஸ் 2 படிப்புக்கு இணையானது.

இந்த இடத்தில் கியூப உயர்கல்வி இரண்டாகப் பிரிகிறது. மருத்துவம், அறிவியல், விவசாயம் போன்ற உயர்கல்விகளில் ஆர்வமுள்ளவர்கள், ப்ரீ–யூனிவர்சிட்டி படிக்கப் போகலாம். மற்றவர்கள் தொழிற்கல்வி படிக்கலாம். அடிப்படைத் தொழிலாளர்கள், திறனுள்ள தொழில் நிபுணர்கள் என்று இரண்டு தரப்பினரையும் உருவாக்குவதாக இங்கு தொழிற்கல்வி உள்ளது.

ப்ரீ–யூனிவர்சிட்டி படித்து முடிப்பவர்கள், அடுத்த கட்டமாக பல்கலைக்கழகங்களுக்குப் போகலாம். கியூபாவில் 47 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றில் நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்க முடியும்.

இளநிலைப் பட்டத்தை நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் படித்துப் பெற வேண்டும். மருத்துவப் பட்டம் என்றால் அதிகபட்சமாக ஆறு ஆண்டுகள் ஆகும். அதன்பிறகு 200 மணி நேர வகுப்புகள், பிராக்டிகல் கிளாஸ் முடித்து, துறை சார்ந்த நிறுவனம் அல்லது ஆராய்ச்சி நிலையத்தில் இன்டர்ன்ஷிப் முடித்தால், முதுநிலைப் பட்டம் பெற்றுவிடலாம்.

இந்தியாவிலிருந்துகூட நிறைய பேர் அமெரிக்காவுக்குப் படிக்கப் போகிறார்கள். ஆச்சர்யமான ஒரு விஷயம்... அமெரிக்காவிலிருந்து ஆண்டுதோறும் பல மாணவர்கள் கியூபாவுக்கு மருத்துவம் படிக்க வருகிறார்கள். அவர்களுக்குக் கல்வியும் இலவசம், ஹாஸ்டல் வசதியும் இலவசம். 'படித்து முடித்து அமெரிக்கா சென்றதும், அதிக வருமானமில்லாத அடித்தட்டு மக்களுக்கு சேவை புரிய வேண்டும்' என்ற உறுதிமொழியை அந்த மாணவர்கள் தர வேண்டும். இப்போதும்கூட 20க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் 3,000 மாணவர்களுக்கும் மேல் கியூபாவுக்கு வந்து படித்து டாக்டர் ஆகிறார்கள். அவர்களுக்கும் இதே நிபந்தனைதான் விதிக்கப்படுகிறது, 'ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டும்!'

ஒரு வயதில் கல்வி கற்கத் துவங்கும் மாணவன் 17 வயதில் கல்லூரி சேர்வதற்குத் தேவையான அறிவைப் பெறுவதாகத்தான் கியூப கல்வி முறை இருக்கிறது.

ஒரு வகுப்பறையில் அதிகபட்சமாக 25 மாணவர்கள்தான் இருக்க வேண்டும். கிராமப்புறங்களில் ஒரு வகுப்பில் பத்துக்கும் குறைவாக மாணவர்கள் இருந்தாலும், அந்த வகுப்பு தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது. பத்துக்கும் குறைவான மாணவர்களை வைத்தே அங்கே 2,000 பள்ளிகள் செயல்படுகின்றன. நம் ஊரில் செய்வது போல, பள்ளிகளை மூடிவிடுவதில்லை.

1959–ம் ஆண்டு புரட்சி மூலம் ஃபிடல் காஸ்ட்ரோ ஆட்சிக்கு வந்தார். அதைத் தொடர்ந்து கியூபாவுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது. இதனால் புது தொழில்நுட்பங்கள், நவீன கருவிகள் என்று எதுவுமே கிடைக்காது. இப்படிப்பட்ட சூழலில் 'கல்விதான் நாட்டுக்கு வளம் சேர்க்கும்' என்பதை உணர்ந்த காஸ்ட்ரோ, கியூபாவில் இருந்த அத்தனை கல்வி நிறுவனங்களையும் அரசுடைமை ஆக்கினார். கல்வி நிறுவனங்களின் அத்தனை செலவுகளையும் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கல்விவரை அனைத்தும் இலவசம்.

இன, மத, பால் வேறுபாடின்றி அனைவரும் கல்வி கற்க அனைத்து வசதிகளையும் அரசு செய்துகொடுத்தது. ஹாஸ்டல் வசதி மற்றும் சீருடை முதற்கொண்டு அரசாங்கமே கொடுக்கிறது. கிராமத்திலும் தரமான கல்வி கிடைக்கச் செய்தார்கள். நகரத்தில் இருக்கும் மாணவரே தரமான கல்வியைக் கற்க முடியும் என்று





இருக்க கூடாது என்பதில் கவனம் எடுத்துக்கொண்டார்கள். இதற்காக ஒரு லட்சம் இளைஞர்களுக்கு குறுகிய கால ஆசிரியர் பயிற்சி கொடுத்து, கிராமங்களுக்கு அனுப்பியது அரசு. 23 ஆயிரமாக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை, உடனடியாக ஒரு லட்சத்தைத் தாண்டியது.

இதற்குப் பெரும் பலன்கள் கிடைத்தன. கல்வியறிவு மிகக்குறைவாக இருந்த நாடுகளில், மிகக் குறுகிய காலத்தில் கிட்டத்தட்ட 100 சதவிகிதம் கல்வியறிவை எட்டிய நாடு கியூபாதான். கல்வியறிவு இல்லாத பெரியவர்கள், மாற்றுத் திறனாளி குழந்தைகள், கிராமப்புற இளைஞர்கள் என்று அனைவருக்கும் எழுதப் படிக்கத் தெரியும் அளவுக்கான கல்வியறிவை ஏராளமான ஆசிரியர்கள் கொண்டு சாதித்தது கியூபா.

தரமான ஆசிரியர்களை உருவாக்குவதில் கியூப கல்வித்திட்டம் கவனமாக இருக்கிறது. அறிவியல்பூர்வமான பயிற்சிகளின் மூலமாகவே ஆசிரியர்களை உருவாக்குகிறது. 1,000 மாணவர்களுக்கு 8 ஆசிரியர் என்பது கியூபாவின் மாணவர், ஆசிரியர் விகிதம். இங்கிலாந்தில் இது 6 என்றும், அமெரிக்காவில் 5 என்றும் உள்ளது. மாணவர்கள் கல்லூரிப் படிப்பு முடித்தால் அவர்களை ஆசிரியர் பணியாற்ற சொல்லி அரசாங்கமே ஊக்கப்படுத்துகிறது. அதனாலேயே அவர்கள் கற்பிக்கும் தரமும் நாட்டின் ஒட்டுமொத்தக் கல்வியறிவும் பெருகுகிறது.

‘கல்வி முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்’ என்ற வாக்கியத்தைக் கண்முன்னே குறுகிய காலத்தில் நிரூபித்துக் காட்டியிருக்கிறது கியூபா.

**– விஜயபாஸ்கர் விஜய்**


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

**யாதும்** நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## சந்தாதாரர் ஆகுங்கள்!

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | | | |
| **முகவரி** | | | |
| **தொலைபேசி** | | **அலைபேசி** | |
| **மின்னஞ்சல்** | | | |

**டிக் செய்யவும்**

☐ **ஓர் ஆண்டு ரூ.150**

☐ **இரண்டு ஆண்டுகள் ரூ.300**

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக்/ டி.டி.யுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55 ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை– 600 033. போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



MHRD, Govt. of India, has ranked

# VIT as the best private engineering institution

in the country.

**மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வி.ஐ.டியை நாட்டின் தலை சிறந்த தனியார் பொறியியல் கல்வி நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.**

In a ranking done for the first time ever by the NIRF (National Institutional Ranking Framework) of MHRD, VIT has been ranked 13th overall and 1st among private institutions under 'Engineering institutions' category.

VIT has also been ranked 17th overall and 7th among private institutions under 'Management institutions' category.

## LEADING IN RESEARCH

**in number of publications**

**By publishing 2233 research articles in Scopus indexed journals in 2015, VIT has surpassed all the other institutions in India**

[Source: Scopus database as on 6.4.2016]

***We thank all our faculty, staff, students, alumni and well-wishers !!***

VIT® UNIVERSITY
(Estd. u/s 3 of UGC Act 1956)

VELLORE ▪ CHENNAI

www.vit.ac.in

VIT - A place to learn; A chance to grow





# கிராமத்தை நோக்கிய பயணம்!



அகரம் பவுண்டேஷனின் 'நமது கிராமம்' திட்டம் செயல்படும் கட்சூரில் சிறுவர்களுக்கான பயிற்சிக்கூடம் அமைக்கும் பணி தற்போது நிறைவு பெற்றுள்ளது. நம் அகரம் விதைத் திட்டத்தில் படித்த முன்னாள் மாணவர் பொறியாளர் கலையரசனின் கட்டிட வடிவமைப்பில் தொடங்கப்பட்ட பணி, தற்போது சீரும் சிறப்புமாக நிறைவு பெற்றுள்ளது.

அழகிய தோற்றப் பொலிவுடன் அமைந்த இந்த பயிற்சிக்கூடத்தில், மாணவர்களுக்கான பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. ஜூன் 21 முதல் ஜூன் 27 வரை, அண்ணா பல்கலைக்கழக தேசிய மாணவர் படை மாணவர்களின் உதவியுடன் இந்தப் பயிற்சி நடைபெற்றது. இதில் அண்ணா பல்கலைக்கழக தன்னார்வலர்கள் 53 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி முகாமில் 'நமது கிராமம்' திட்டம் செயல்படும் மூன்று கிராமங்களைச் சேர்ந்த சுமார் 450க்கும் மேற்பட்ட மக்கள் மற்றும் மாணவர்கள்









# நிகழ்வுகள்



பயன்பெற்றனர்.

இந்த முகாமில் அடுத்தகட்டமாக எடுத்துச் செல்ல வேண்டிய திட்டங்களுக்கு செயல் வடிவம் தரப்பட்டன:

- பள்ளிப் படிப்பை இடைநிறுத்தம் செய்தவர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, சுமார் 50 மாணவர்கள் கண்டறியப்பட்டனர். இவர்களில் திருமணம் ஆகாத சுமார் 40 மாணவர்களுக்கு வழிகாட்டுதல் தர முடிவு செய்யப்பட்டது. இவர்களுக்கான வழிகாட்டிகளாக நம் அகரம் விதை மாணவர்கள் 11 பேர் பொறுப்பேற்றுள்ளனர். இரண்டு வாரங்கள் தொடர் வழிகாட்டுதல் கொடுத்ததில், பள்ளி இடைநின்ற 9 மாணவர்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.
- 'நமது கிராமம்' செயல்படும் மூன்று கிராமங்களிலும் 7 நபர்கள் கொண்ட கிராம வளர்ச்சிக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்லது. அவர்களுக்கு அரசு சட்டங்கள் மற்றும் திட்டங்கள் பற்றி சொல்லப்பட்டது. அவற்றை எவ்வாறு கேட்டுப் பெறுவது என்பது பற்றிய புரிதல் கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, மனு எழுதும் முறை பற்றிய பயிற்சியும் இரண்டு வாரங்களாக அளிக்கப்பட்டது.







## தன்னார்வலர்கள் சந்திப்பு!

திருநெல்வேலி மாவட்டத்தின் காவல்கிணறு பகுதியில் உள்ள தன்னார்வலர்கள் 'யாதும் ஊரே' அமைப்பின் மூலம் பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வருகின்றனர். ஜூன் மாதம் நடைபெற்ற செயல்பாடுகளைப் பற்றி விவாதிக்கவும், அடுத்த கட்டமாக செய்யவேண்டிய செயல்பாடுகள் பற்றிப் பேசவும் ஒரு சந்திப்பு நடைபெற்றது. காவல்கிணறு ஏரியைப் பராமரிக்கவும், ஏரிக்கு நீர் வரும் பகுதி, மற்றும் கரைகளில் மரம் நடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



## கற்றல் முறை...

# நம்பிக்கைகளும் உண்மையும்!

வகுப்பறையில் முதல் வரிசையில் இருக்கும் மாணவர்களுக்காக ஆசிரியர்கள் பெரிதாக சிரமப்படுவதில்லை. கடைசி வரிசையில் இருப்பவர்கள்தான் அவரின் பெரும் உழைப்பை எதிர்பார்க்கிறார்கள். நடு பெஞ்சுகளில் இருப்பவர்களுக்காகவும் அவர் ஓரளவு சிரமப்பட வேண்டியுள்ளது. எல்லோரும் ஒரே மாதிரி கற்றுக்கொள்வதில்லை. ஒரே மாதிரி மதிப்பெண்களும் எடுப்பதில்லை.

ஒரு மாணவருக்கு எந்த விதத்தில் கற்றுக்கொள்வது பிடிக்கிறதோ, அந்த விதத்தில் சொல்லிக்கொடுத்தால்தான் அவரால் எளிதாகவும் விரைவாகவும் கற்றுக்கொள்ள முடியும். மூளையின் செயல்பாட்டை ஆராய்ந்து பார்த்து, இப்படித்தான் சொல்கிறார்கள் அறிவியல் அறிஞர்கள். ஆனால், கல்விசார்ந்த ஆராய்ச்சிகளும், அறிவியல் ஆராய்ச்சிகளும் இதற்கு எதிரான உண்மைகளைச் சொல்கின்றன.

ஒவ்வொரு மனிதரும் அடுத்தவர்களிடமிருந்து வித்தியாசப்படுவார்கள். 'எல்லோரும் தனித்துவமான படைப்புகள்' என அறிவியலே சொல்கிறது. மாணவர்களும் இப்படித்தான். கற்றல் பற்றிய சிந்தனையும் உணர்வும் ஒவ்வொரு மாணவருக்கும் வேறுவிதமாக இருக்கும். ஒவ்வொருவரின் பலமும் வேறாக இருக்கும். ஒரு மாணவரின் மூளையின் முக்கிய பகுதிகள் எப்படி இருக்கின்றனவோ, அதைப் பொறுத்து அவரின் கற்றல் திறன் இருக்கும். அந்தத் திறனைப் பொறுத்தே அவரின் கல்வி அமையும்.

- படங்கள், ஓவியங்கள் மற்றும் ஒளிப்படங்களைப் பார்த்து கற்றுக்கொள்வது 'காட்சிவழிக் கற்றல்' எனப்படுகிறது. படங்களையே பாடங்களாக நினைக்கும் பலருக்கு இது எளிதில் புரியும்.
- உணர்வுவழிக் கற்றல் இன்னொரு வகை. சைகைகள், தொடுதல், கைகளால் செய்யப்படும் அசைவுகள் என உடலால் கற்றுக்கொள்வது இந்த வகை.
- சிலருக்கு ஒலிவழிக் கற்றல் பிடிக்கும். ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடங்களைக் கேட்டு இவர்கள் கற்றுக்கொள்வார்கள்.
- சிலருக்கு வார்த்தைகள் வழியே கற்றுக்கொள்வது சுலபமாக இருக்கும். எழுதியும், கேட்டும் இவர்கள் படித்துக்கொள்வார்கள்.



• சிலருக்கு வெறுமனே மனப்பாடம் பிடிக்காது. ஒரு பாடத்தைக் கற்றுத் தருகிறோம் என்றால், அது ஏன் அப்படி வருகிறது என்ற காரணத்தைச் சொல்லிவிட்டால் புரிந்துகொள்வார்கள்.

• சிலருக்கு குரூப் ஸ்டடி பிடிக்கும். ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள் இணைந்து, பாடம் பற்றி விவாதித்தபடி படிப்பார்கள். இந்த விவாதம் அவர்களின் கற்றலுக்கு உதவும்.

• சிலருக்கு தனிமைக் கற்றல்தான் பிடிக்கும். அமைதியாகத் தனிமையில் அமர்ந்து தனக்குள் சத்தமின்றி படிப்பார்கள். இதுதான் மனதுக்குள் போகும் என்பது இவர்களின் நம்பிக்கை.

''ஒருவருக்குப் பிடித்தமாகவும் பொருத்தமாகவும் இருக்கும் கற்றல் முறை எது என்பதைப் புரிந்துகொண்டு, அதற்கு ஏற்றபடி சொல்லிக்கொடுத்தால், அங்கு கற்றல் சிறப்பாக இருக்கும்'' என்பது கல்வி அறிஞர்களின் கருத்து. ஆனால், இதை எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். ''இது அறிவியல்ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மை அல்ல. இந்தக் கருத்தைக் கல்வியாளர்கள் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். ஒருவருக்கு எப்படி சொல்லிக்கொடுத்தால் அவரின் மூளை உற்சாகமாகி கற்றலைத் தூண்டுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளவே இந்தக் கற்றல் முறை உதவும். ஆனால், இதுவே ஒருவரை சிறந்த மாணவராக்கிவிடாது'' என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

## உண்மை என்ன?

• ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். அதனால்தான் அவர்களின் கற்றல் திறனும் வித்தியாசப்படுகிறது. சிலருக்கு சிறப்புத் திறமைகள் இருக்கும்; சிலருக்கு சிறப்புத் தேவைகள் இருக்கும். கற்றல் அறிவு என்பது பல்வேறு வடிவங்களைக் கொண்டது. யாரும் திறமை குறைந்தவர்கள் இல்லை. ஆசிரியர்களால் அவர்களின் திறமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதே உண்மை.

• மாணவர்களின் ஆர்வங்களும் வேறுவேறானவை. சிலருக்கு சில பாடங்கள் கசக்கும்; சில பாடங்கள் இனிக்கும். எந்தப் பாடம் பிடிக்கிறதோ, அதை வேகமாகவும் ஆழமாகவும் கற்றுக்கொள்கிறார்கள்.

• மாணவர்களின் கற்றுக்கொள்ளும் திறனில், அவர்களின் பின்னணியும் ஆதிக்கம் செலுத்துகிறது. மூன்று தலைமுறைகளாகக் கல்வி கற்கும் குடும்பத்திலிருந்து வந்த மாணவனும், முதல் தலைமுறையாகப் படிக்க வரும் மாணவனும் ஒரே மாதிரி கற்றுக்கொள்ள முடிவதில்லை. வீட்டில் படிக்கும் வாய்ப்புகள் இல்லாத ஏழை மாணவனும், சகல வசதிகளையும் குடும்பத்தால் செய்துகொடுக்க முடிந்த பணக்கார மாணவனும் ஒரேமாதிரி படிப்பதில்லை.

• பெரும்பாலானவர்களுக்குக் கற்றலில் ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது. இதை நோய் என புரிந்துகொள்ள வேண்டியதில்லை. சிக்கலான கணக்குகளுக்குக்கூட எளிதாகத் தீர்வு கண்டுவிடுகிற ஒரு மாணவர், இரண்டு வரி திருக்குறளை மனப்பாடம் செய்ய முடியாமல் திணறுவார். இதைப் புரிந்துகொண்டு அவருக்குக் கல்வி தர வேண்டும்.

இதில் ஆசிரியர்கள் செய்யவேண்டியது என்ன? கல்வி கற்றல் தொடர்பாக அமெரிக்காவின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய ஆராய்ச்சிகளின் முடிவுகள் என்ன தெரியுமா?

• ஒரு மாணவன் கற்கும் விதத்தைப் புரிந்துகொண்டு, அதற்கு ஏற்றபடி தன் கற்பிக்கும் முறையை ஓர் ஆசிரியர் மாற்றினாலும், அதனால் பிரமாதமான விளைவுகள் ஏற்படும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஒரு வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொருவருக்காகவும் தனது கற்பித்தல் முறையை ஆசிரியர் மாற்றிக்கொண்டிருக்க முடியாது. எனவே, அவருக்குத் தெரிந்த சிறந்த முறை எதுவோ, அதன்படி அவர் கற்பித்தால் போதுமானது.

• மாணவர்களின் கற்கும் முறையைப் பார்க்காமல், அவர்களின் ஆர்வத்தையும் பின்னணியையும் ஆசிரியர்கள் பார்க்க வேண்டும்.



• மாணவர்களின் கற்றல் முறையையும் திறனையும்விட, ஒரு பாடத்தின் உள்ளடக்கம்தான் வேகமாகவும் சிறப்பாகவும் கற்பதைத் தீர்மானிக்கிறது.

• வெறும் மனப்பாடமாக இல்லாமல், வெறும் உரையாடலாக மட்டும் இல்லாமல், காட்சிவழிக் கற்றல், உணர்வுவழிக் கற்றல் என பல்வேறு கற்றல் முறைகளையும் கலவையாகப் பயன்படுத்தி கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு ஏற்றபடி ஆசிரியரின் கற்பிக்கும் முறை அமைய வேண்டும்.

• எல்லா பாடங்களையும் ஒரே மாதிரி கற்றுத்தர முடியாது; வெவ்வேறு பாடங்களை ஒரே முறைப்படி மாணவர்களால் கற்றுக்கொள்ளவும் முடியாது. மொழிப் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் விதம் வேறு; அறிவியலைக் கற்றுக்கொள்ளும் விதம் வேறு. தன் வகுப்பறையில் எதை எப்படிக் கற்றுத் தருவது சிறப்பு என்பதைப் புரிந்துகொண்டு, அதற்கு ஏற்றபடி ஆசிரியர்கள் செயல்பட வேண்டும்.

• ஒரு மாணவனின் கற்றல் முறைக்கும், அவன் சிறப்பாகக் கற்றுக்கொள்வதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது திறமை சம்பந்தப்பட்டது. •

# யானைகளுக்கு ஆபத்து!



“கடந்த ஆண்டுகளோடு ஒப்பிடும்போது தமிழகத்தில் யானைகள் இறப்பது இரண்டு மடங்கு அதிகரித்துவிட்டது’’ என வேதனையுடன் சொல்கிறார்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள். 2015–16 காலகட்டத்தில் 61 யானைகள் இறந்தன. 2017–18 காலகட்டத்தில் இது 125 ஆக உயர்ந்துவிட்டது. தமிழகக் காடுகளில் சுமார் 2,700 யானைகள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ள நிலையில், இந்த மரண எண்ணிக்கை அபாயகரமாகக் கருதப்படுகிறது.

‘‘இதில் அச்சப்படும் அளவுக்கு ஏதுமில்லை.

# காற்றை சுத்தமாக்கும் திட்டம்!

காற்று மாசுக்கு உலகப்புகழ் பெற்றது டெல்லி. பனிக்காலத்தில் நகரமே புகைமூட்டமாகும் அளவுக்கு காற்று மாசு ஏற்பட்டு, குழந்தைகளும் முதியவர்களும் வீட்டுக்குள் முடங்கும் துயரம் கடந்த ஆண்டு நிகழ்ந்தது. இந்த ஆண்டு அப்படி ஏற்படாமல் தடுக்க, ‘தேசிய தூய்மைக் காற்றுத் திட்டம்’ என்ற திட்டத்தை செயல்படுத்துகிறது மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம்.

இதன்படி பஸ்களின் புகைபோக்கிகளில் ஃபில்டர் பொருத்துவது, தூசு பறக்காமல் தடுக்க வேதிப்பொருட்கள் தெளிப்பது, காற்றிலிருக்கும் தூசுகளை உறிஞ்சுவதற்கு கருவிகள் பொருத்துவது என்று பல விஷயங்களை அரசு செயல்படுத்த உள்ளது. குப்பைகளைப் பெருக்குவதாலேயே காற்றில் பெருமளவில் தூசு பரவுகிறது. எனவே, வீதிகளை இயந்திரங்கள் மூலம் சுத்தம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். டெல்லியில் இப்படி பொது இடங்களைச் சுத்தம் செய்யும் இயந்திரங்கள் ஏற்கனவே 34 உள்ளன. இன்னும் 40 இயந்திரங்களைப் புதிதாக வாங்குகிறார்கள்.

டெல்லி மெட்ரோ ரயிலுக்காகப் போடப்பட்டுள்ள உயர்மட்டப் பாதை, நகரின் நெரிசலான வீதிகளின் வழியாகவே போகிறது. மெட்ரோ ரயிலுக்காக அமைக்கப்பட்டிருக்கும் 262 தூண்களிலும் தொங்கும் தோட்டம் அமைக்கப்படுகிறது. இப்போது 60 தூண்களில் செங்குத்துத் தோட்டங்கள் அமைத்து செடிகள் வளர்க்கப்படுகின்றன. இவை வெறும் அழகுக்காக மட்டுமில்லை, காற்று மாசைக் கட்டுப்படுத்தவும் உதவும். தாவரங்களுக்குக் காற்றைச் சுத்திகரிக்கும் பண்பு உண்டு. சென்னை போன்ற நகரங்கள் இதிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய உண்டு.

சுற்றுச்சூழல் செய்திகள்





பெரும்பாலானவை இயற்கை மரணங்கள்தான். நோய்கள், நோய்த்தொற்றுகள், யானைக்கூட்டத்தில் ஏற்படும் சண்டைகள், காயங்கள், கீழே விழுவது மற்றும் முதுமை போன்ற காரணங்களால்தான் பெரும்பாலான யானைகள் இறந்தன. வேட்டைக்காரர்களால் கொல்லப்பட்டது ஒரே ஒரு யானைதான். விஷம் வைத்து ஒரு யானைகூட கொல்லப்படவில்லை'' என்கிறார்கள் வனத்துறையினர்.

ஆனால், மின்வேலிகளில் சிக்கி யானைகள் இறப்பது அதிகரித்துள்ளது. காடுகளை ஒட்டிய கிராமங்களில் இரவு நேரங்களில் மின்வேலிகளை அமைக்கிறார்கள். இவற்றில் சிக்கி யானைகள் இறக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளில் இப்படி மின்வேலி அமைத்த யாரும் தண்டிக்கப்படவில்லை என்பதுதான் இதே தவறை மீண்டும் மீண்டும் செய்யத் தூண்டுகிறது.

''கோடையில் காடுகளில் தண்ணீர் கிடைக்காமல் ஊருக்குள் வரும் யானைகள், அசுத்தமான தண்ணீரைக் குடிக்கின்றன. பூச்சிமருந்து அடித்த பயிர்களை சாப்பிடுகின்றன. இதன் பாதிப்புகளால் நிறைய யானைகள் சாகின்றன. காடுகளின் வளம் காக்கப்பட்டால் இப்படி நடக்காது'' என்கிறார்கள் சூழல் ஆர்வலர்கள்.

# ஒரு லிட்டர் குடிநீர் 50 பைசா!

அரசு நிறுவனங்கள் விற்கும் ஒரு லிட்டர் குடிநீரின் விலை 10 ரூபாய். மற்றவை இருமடங்கு அதிகம். இந்த நிலையில் ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டில் 50 பைசா என்றால் அது புரட்சிதானே. பீகாரின் தாகம் தீர்க்க இப்படி ஒரு புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அசுத்தமான தண்ணீரை சுத்தமான தண்ணீராக சுத்திகரித்து லிட்டர் 50 பைசாவுக்குக் கொடுக்கப்போகிறார்கள். அப்படிக் கொண்டுவந்தால், உலகிலேயே குறைந்த விலை கொண்ட குடிநீர் இதுதான்.

சுலப் என்ற சர்வதேச அமைப்பு `சுலப் சௌஜல்யா' (Sulabh Shauchalya) எனும் திட்டத்தை சில ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம், அடித்தட்டு மக்களுக்குக் குறைந்த செலவில் தூய்மையான குடிநீரைக் கொடுக்க முடிவு செய்தது. மாசடைந்த ஆறு, குளம் ஆகியவற்றில் இருக்கும் தண்ணீரை எடுத்து, சுத்திகரித்து, ஒரு லிட்டர் 50 பைசா விலைக்குக் கொடுப்பதுதான் இந்தத் திட்டம்.

மேற்கு வங்காள மாநிலத்தில், மூர்ஷிதாபாத் மற்றும் நடியா ஆகிய இடங்களில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இத்திட்டம் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டது. பிரெஞ்சு நிறுவனத்தின் உதவியோடு தொடங்கப்பட்ட இத்திட்டம், பெரும் வரவேற்பு பெற்றது. அப்போது இத்திட்டத்தை பெரிய அளவில் செயல்படுத்த பீகார் மாநிலம், தார்பங்கா தேர்வு செய்யப்பட்டது. வெறும் 20 லட்ச ரூபாய் செலவில் இது செயல்படுத்தப்படுகிறது.

சுலப் நிறுவனத்தின் நிறுவனர் பின்டேஸ்வர் பதக், ''உலகிலேயே மிகக்குறைந்த விலையில் தண்ணீரைக் கொடுக்க இருக்கிறோம். அதற்கான சோதனை முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறோம். இப்போது இத்திட்டத்தை முதற்கட்டமாக பீகார் மாநிலம் தர்பங்காவில் செயல்படுத்துகிறோம். வரும் டிசம்பர் மாதம் முதல் இத்திட்டம் செயல்படத் துவங்கும். ஒரு சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு நாளைக்கு 8 லட்சம் லிட்டர் வரை குடிநீர் சுத்திகரிக்கலாம். பீகாரின் வட பகுதிகளில் கிடைக்கும் நீரில் ஆர்செனிக் போன்ற வேதிப்பொருள்கள் அதிகமாகக் கலந்துள்ளதால், சுத்தமான குடிநீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகின்றனர். அதனால் பலர் கடுமையான நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள். இத்திட்டம் இந்த நிலையை நிச்சயமாக மாற்றும்'' என்கிறார்.

மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள 24 பர்கானாஸ் மாவட்டத்தில் இந்த நிறுவனம், 20 லட்சம் ரூபாய் செலவில் குளம் போன்ற வடிவத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்தது. அதற்கு முன்புவரை இந்தப் பகுதி மக்கள் நல்ல தண்ணீர் கிடைக்காமல் வேறு பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து கொண்டிருந்தனர். இப்போது அந்த நிலைமை இல்லை. பீகாரும் இப்படி ஆகும் என நம்புகிறது சுலப் நிறுவனம்.




# ஆச்சர்ய உலகம்

ஃப்ரிட்ஜில் வைத்து பயன்படுத்தினால், ரப்பர் பேண்ட் நீண்ட காலத்துக்கு உழைக்கும்.



ஒரு முதலைக்கு அதன் வாழ்நாளில் சுமார் 3,000 பற்கள் முளைக்கின்றன.





மனிதர்களின் மூளை, ஒரு 10 வாட் மின்சார பல்ப் பயன்படுத்தும் அதே அளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது.





சூரியனில்
கொஞ்சம்
தங்கமும் இ
கண்டுபிடித்தி
ஆனால்
தகதகவென
அது கார

கம்பளிப்புழுக்களுக்கு வாய் இருக்கும்; ஆனால் வண்ணத்துப்பூச்சியாக வடிவம் எடுத்ததும் அதன் வாய் காணாமல் போய்விடும்.







நம் இமைகளில் இருக்கும் முடிகள் ஒவ்வொன்றும் ஐந்து மாதங்களுக்கு ஒருமுறை உதிர்ந்து புதிதாக முளைக்கின்றன.

ஸ்கேட்டிங்
நவீன விளை
நினைத்துக்கொ
ஆனால், நாமே
ஆண்டுகளு
விலங்குகளின்
கால்களில் சு
ஸ்கே
செய்திருக்

ஒரு எலியின் இதயம், டிக் டாக் சாக்லெட்டைவிட குட்டியாக இருக்கும்.



கங்காருகள் வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பித்து உடலைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள, தங்கள் முன்கால்களை அடிக்கடி நக்குகின்றன.



நம் காதுகளில் ஒருவித மெழுகு சுரக்கிறது அல்லவா? நாம் பயத்தில் இருந்தால், இது வழக்கத்தைவிட அதிகமாக சுரக்கும்.



குழந்தைகள்
நாள் விழாக்
விடப்படும்
ஹீலிய
அடைக்கப்
சனி கிரக
ஹீலியம் வா
உருவா

மனிதர்களைப் போலவே குரங்குகளும் கிச்சுகிச்சு மூட்டினால் சிரிக்கும்.



மலைக்காடுகளில் காட்டுத்தீ மேலிருந்து கீழாகப் பரவுவதைவிட, கீழிருந்து மேலாக மிக வேகமாகப் பரவும்.



ஒரு மைல் உயரத்தில் பறந்தாலும், தரையில் இருக்கும் ஒரு முயலை அங்கிருந்து பார்த்துவிடும் வல்லமை பெற்றது கழுகு.



பூமியின் மேற்பரப்பில் பத்தில் ஒரு பங்கு, பனியால் மூடப்பட்டிருக்கிறது.

# ஆச்சர்ய உலகம்



பனிக்கட்டி
அடுக்குகளுக்குள்
சிறைபட்டிருக்கும்
காற்று, பல்லாயிரம்
ஆண்டுகளுக்கு முந்தைய
காற்றாக இருக்கலாம்.

இந்த பூமியில்
இருக்கும் மனிதர்களின்
எண்ணிக்கையைவிட
அதிகமான மெசேஜ்கள்
வாட்ஸ்அப் மூலம் மட்டுமே
ஒவ்வொரு நாளும்
பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

கொஞ்சமே
அளவுக்குத்
இருப்பதாகக்
திருக்கிறார்கள்.
, சூரியன்
மின்னுவதற்கு
ரணமல்ல!



கிரேக்க மற்றும்
ரோமக் கடவுள்களின்
பெயர்கள்தான் மற்ற
எல்லா கிரகங்களுக்கும்
வைக்கப்பட்டுள்ளன.
இப்படிப் பெயர்
வைக்கப்படாத ஒரே
கிரகம் பூமிதான்.

அமெரிக்காவில்
இருக்கும் ஒருவகை
கழுகுகளுக்கு
'வழுக்கைத்தலை கழுகுகள்'
என பெயர். உண்மையில்
இவை வழுக்கை அல்ல;
தலையில் வெள்ளையாக
இருக்கும் என்பதால்
இந்தப் பெயர்.

ஒரு பாம்பு தன்
தலையின் அளவைவிட
இரண்டு மடங்கு
அகலமான உணவை
சாதாரணமாக சாப்பிடும்.



ங் என்பது
ளயாட்டு என
ண்டிருக்கிறோம்.
டாடிகள் 4,000
க்கு முன்பே
ன் எலும்புகளை
ட்டிக்கொண்டு
கட்டிங்
க்கிறார்கள்.



பூமியின்
தென் துருவத்தைவிட
வட துருவத்தில்
சற்றே வெப்பநிலை
அதிகமாக
இருக்கும்.

பிளாஸ்டிக் மட்டுமில்லை,
கண்ணாடியும் பல்லாயிரம்
ஆண்டுகளுக்கு மட்கிப்
போகாமல் அப்படியே
பூமியில் இருக்கும்.

விமானங்கள் மனிதர்கள்
பறப்பதற்கு மட்டுமேயானது
அல்ல. ஒவ்வொரு
ஆண்டும் சுமார் 20 லட்சம்
விலங்குகள் விமானத்தில்
பறக்கின்றன.



ளின் பிறந்த
களில் பறக்க
பலூன்களில்
ம் வாயு
பட்டிருக்கும்.
கம், இதே
யுவும் கலந்து
ானதே!



உலகின் மிகச்சிறிய கடல்
குதிரை, ஒரு தபால்
ஸ்டாம்பைவிட குட்டியாக
இருக்கும்.

நம்மால் இரண்டு
கண்களையும் ஒரே
திசையில் திருப்பித்தான்
பார்க்க முடியும். ஆனால்,
கடல் குதிரைகள் ஒரே
நேரத்தில் இரண்டு
கண்களையும் இரண்டு
திசைகளில் திருப்பிப்
பார்க்கும்.

மனிதர்கள் ஒரு
நாளில் சராசரியாக 17
ஆயிரம் தடவை கண்
சிமிட்டுகிறார்கள்.






# புரியவைக்கும் இணைப்புச் சொற்கள்!

ஆங்கில இலக்கணத்தில் Preposition மற்றும் Conjunction என்று இரண்டு Termகளை கேள்விப்பட்டிருப்போம்.

இரண்டு பெயர்ச்சொற்களை (Noun) அல்லது வினைச்சொற்களை (Verb) இணைக்கவோ, அல்லது இரண்டு வாக்கியங்களை இணைக்கவோ இந்த Preposition மற்றும் Conjunction ஆகியவற்றைப் பயன்படுத்துகிறோம்.

Prepositionக்கும், Conjunctionக்கும் இடையே நுணுக்கமான வேறுபாடுகள் இருக்கின்றன. எனக்கு ஆங்கில இலக்கணம் பிடிக்காது என்பதால், அதன் உள்ளே போகவில்லை.

■ விஜயபாஸ்கர் விஜய்

உதாரணமாக

on, over, to, from, about, for, against, with, between போன்றவை Preposition என்ற வகையில் வரும்.

and, but, or, because, then போன்றவை Conjunction என்ற வகையில் வரும்.

ஆங்கில மீடியம் படிக்கும் குழந்தைகள் அறிவியல் படிக்கும்போது இந்த Preposition, Conjunction பற்றிய விழிப்பு உணர்வு இருக்க வேண்டும். குறிப்பாக, Definition படிக்கும்போது இருக்க வேண்டும்.

உதாரணமாக, இப்படி ஒரு Definition இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்.

Magnification of lens is defined as ratio of the height of

the image to the height of the object.

முதல் கட்டமாக இதன் அறிவியல் கூற்றை அவர்களுக்கு நன்கு புரியவைத்துவிட வேண்டும்.

அடுத்து, இந்த Definition மனதில் பதியவேண்டும் என்பதற்காக புத்தகத்தில் உள்ளதுபோல மாணவர்கள் அப்படியே எழுத வைக்க வேண்டிய வேலை இருக்கிறதல்லவா?

இதிலுள்ள Preposition, Conjunction ஆகியவற்றை முதலில் கவனிக்க வேண்டும்.

Magnification (of) lens (is) defined (as) ratio (of the) height (of the) image (to the) height (of the) object.

of
is
as
of the
of the
to the
of the

இதை ஒரு மாணவர் நன்கு பார்த்து உணர்ந்துகொண்டால், அவரால் இந்த Definition ஐ எளிதில் படித்துவிட முடியும்.

Magnification
of (நிறுத்தி மெல்ல நீட்டிச் சொல்ல வேண்டும்)
lens
is (நிறுத்தி மெல்ல நீட்டிச் சொல்ல வேண்டும்)
Defined
as (நிறுத்தி மெல்ல நீட்டிச் சொல்ல வேண்டும்)
ratio
of the (நிறுத்தி மெல்ல நீட்டிச் சொல்ல வேண்டும்)
height
of the (நிறுத்தி மெல்ல நீட்டிச் சொல்ல வேண்டும்)
image
to the (நிறுத்தி மெல்ல நீட்டிச் சொல்ல வேண்டும்)
height
of the (நிறுத்தி மெல்ல நீட்டிச் சொல்ல வேண்டும்)
object.

இப்படி ஒருமுறை பிரித்து மாணவர்களுக்கு அல்லது வீட்டுக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கும்போது அவர்கள் இந்த Definition என்ன என்பதை எளிதில் புரிந்துகொள்வார்கள்.

பெரும்பான்மையான மாணவர்கள் Definition சொல்லும்போது, இந்த இணைப்புச் சொற்களை சரியாகச் சொல்லி இணைக்கத்தான் திணறுவார்கள்.

ஏர்போர்ட்டுக்குள் தனியே ஒன்றும் புரியாமல் போகும்போது, ஆங்காங்கே வழிகாட்டுப் பலகைகள் இருந்து வழிநடத்துமே, அது மாதிரிதான் இந்த இணைப்புச் சொற்களும். அவை அடுத்த வாக்கியப் பொருளை நோக்கி குழந்தைகளை வழிநடத்தும்.

இதெல்லாம் போக அறிவியல் Definition ஒன்றை ஏன் மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற உணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். (பொதுவாக மனப்பாடம் செய்வதை எதிர்க்கும் மோசமான புத்தி நம்மிடையே இருக்கிறது. அது தவறான பார்வை. அதைப் பற்றி தனியே பிறகு பார்க்கலாம்.)

அதன்படி இந்த Definition என்ன என தமிழில் விளக்கமாக மாணவர்களுக்குச் சொல்லிவிட்டு, அவர்களுக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் எழுதச் சொல்ல வேண்டும். அவர்களுக்கு எப்படித் தெரிகிறதோ, அப்படி எழுதுமாறு ஊக்கப்படுத்த வேண்டும்.

30 மாணவர்கள் என்றால் 30 விதமாக எழுதுவார்கள் என்று வைத்துக் கொள்வோம். அல்லது வீட்டில் நீங்கள் சொல்லித் தரும்போது, குழந்தை வேறுவிதமாக எழுதுகிறது என்று வைத்துக் கொள்வோம். ஆசிரியர் அல்லது பெற்றோர் அந்த விதவிதமான அறிவியல் எழுத்துகளை, பாடப்புத்தகத்தில் உள்ள Definition என்ன என்பதை ஒப்பிட்டுக் காட்டிப் பேச வேண்டும்.

“So Students, Definition அப்படிங்கிறது Best way of packing a scientific thought in Language” என்று சொல்ல வேண்டும்.

ஒரு சூட்கேஸுக்குள் துணியை அடுக்கச் சொன்னால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அடுக்குவார்கள். சிலர் கச்சிதமாக அடுக்குவார்கள்; சிலர் அடுக்கத் தெரியாமல் பாதித் துணியைக் கையில் வைத்துக்கொண்டு விழிப்பார்கள். எப்படிப் பார்த்தாலும், சூட்கேஸில் கச்சிதமாகத் துணியை அடுக்குவதற்கு ஒரே ஒரு Methodதான் பெரும்பாலும் இருக்கும். அந்த ஒரு Methodதான் DEFINITION.

ஆக, “Definition என்பது நம்மைக் கொடுமைப்படுத்துவதற்காக இல்லை. நமக்கு வசதி ஏற்படுத்தவே இருக்கிறது” என்று சொல்லிவிட்டால் போதும்... மாணவர்கள் வாழ்க்கை முழுவதும் Definition என்பதைத் துல்லியமாகப் புரிந்துகொண்டு, துல்லியமான மொழியில் அதை வெளிப்படுத்திக்கொண்டு இருப்பார்கள். ●





# காட்டைக் காக்கும் நண்பன்!

உலகின் புலிகளில் 70 சதவிகிதம் இந்தியாவில்தான் இருக்கின்றன. அதே சமயம் கடந்த நூறாண்டுகளில் அதிகம் வேட்டையாடப்பட்ட விலங்கும் புலிதான். அதனால் புலிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, மற்ற நாடுகளைவிட நமக்கே அதிகம். அதனால்தான் இந்தியாவில் 50 புலிகள் சரணாலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை இந்தியாவின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் இரண்டு சதவிகிதத்தைக் கொண்டுள்ளன.

இந்தியாவில் எத்தனை புலிகள் இருக்கின்றன என்ற கணக்கெடுப்பு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவது வழக்கம். இப்போது நடைபெற்றுவரும் இந்தக் கணக்கெடுப்பின் முடிவு, இந்த ஆண்டு டிசம்பரில் வெளியாகும். கடைசியாக 2014ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் இருக்கும் புலிகள் 2,226. இது 2010ம் ஆண்டில் 1,706 என்ற எண்ணிக்கையில் இருந்தது. தொடர்ச்சியான பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே இது இந்த ஆண்டும் 2,500 என்ற எண்ணிக்கையைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருபுறம் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இருந்தாலும், புலிகளின் இறப்பும் தொடர்கிறது. கடந்த 2012 முதல் 2017 வரை இறந்த புலிகளில் 45 சதவிகித புலிகள் இயற்கைக்கு முரணான காரணங்களால் இறந்திருக்கின்றன. வேட்டைக்காரர்களால் சுடப்படுவது, மின்வேலியில் சிக்கி உயிரிழப்பது போன்றவையே இந்தக் காரணங்கள். 2017ம் ஆண்டில் மட்டும் 115 புலிகள் இறந்திருக்கின்றன.

புலிகளுக்கும் மனிதர்களுக்குமான முரண்பாடுகள் சமீப ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. ஆனால், புலிகள்தான் காடுகளைக் காக்கும் நண்பன் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். புலிகள் இருக்கும் காடுகள்தான் வளமாக இருக்கும். அவற்றின்மீதான பயத்தில் காடுகளை அழிப்பவர்கள் வரமாட்டார்கள். புலிகளைப் பாதுகாப்பது வனத்துறையினரின் பணி மட்டுமே இல்லை. இந்த சமூகத்துக்கும் அந்தக் கடமை இருக்கிறது.

'புலிகள் இல்லாமல் போனால் அந்தக் காடுகள் என்ன ஆகும்' என்ற உண்மையை எடுத்துச்சொல்லி, அடுத்த தலைமுறைக்கும் சூழல் விழிப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும். இலக்கியங்கள் மூலமாக இதைச் செய்யலாம். ஒரு கருத்தை நேரடியாகச் சொல்வதற்கு பதிலாக கதையாகச் சொன்னால் எல்லோரது மனதில் பதியும். இது அனைவரும் அறிந்த உண்மை.

புலி வேட்டையால் ஏற்படும் விளைவை ஆங்கில எழுத்தாளர் ரஸ்கின் பாண்ட் 'சுவையான புலி எனது நண்பன்' என்ற சிறுகதையில் சொல்லியிருக்கிறார். அந்தக் கதையின் சுருக்கம் இதுதான்:

அந்தக் காட்டை இரண்டாகப் பிரிப்பது ஓர் ஆறு. ஆற்றின் அந்தப் பக்கம் அடர்காடு. இந்தப் பக்கம் ஒரு காடும் மனிதர்களின் குடியிருப்பும் இருக்கின்றன. இந்தப் பக்கக் காட்டில் மொத்தம் 40 புலிகள் இருந்தன. அவற்றில் 39 புலிகளை பணக்கார வேட்டைக்காரர்கள் பெருமைக்காக வேட்டையாடிக் கொன்று விடுகின்றனர்.

ஒரே ஒரு வயதான புலி மட்டும் எஞ்சியிருக்கிறது. அந்தப் புலி மிகுந்த எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருக்கிறது.

காட்டுக்குள் இருக்கும் மேய்ச்சல் புல்வெளியில் சோட்டுவும் நந்துவும் எருமை மாடுகளை மேய்ப்பார்கள். அவர்கள் மேய்க்கும் எருமை மாடுகளை அப்புலி ஒன்றும் செய்யாது. 'எருமை மாடுகள்தான் கிராம மக்களின்

வாழ்வியல் ஆதாரம். அதைத் தொந்தரவு செய்தால் தனக்குப் பிரச்னை வரும்' என்று அந்தப் புலிக்குத் தெரியும். அதனால் அது எருமைகளையோ மனிதர்களையோ எதுவும் செய்யாமல், ஒதுங்கிப் போய்விடும்.

ஒருநாள் அக்காட்டுக்கு வேட்டையாட பணக்கார வேட்டைக்காரர்கள் வருகிறார்கள். ''இங்கு ஒரே ஒரு புலி இருக்கிறதாமே. குரல் கேட்டதாகக் கேள்விப்பட்டு வந்திருக்கிறோம்'' என்கிறார்கள். கிராமத்தினருக்கு நிறைய பணம் கொடுக்கிறார்கள்.

உறவினர்கள் சோட்டுவையும் நந்துவையும் கூப்பிட்டு, வேட்டையாடுபவர்களுக்கு மரத்திலான தளம் அமைத்துக் கொடுக்கச் சொல்கிறார்கள். நந்துவும் சோட்டுவும் அப்படியே செய்கிறார்கள். ஆனால் நந்து, மரத்தின் மேல் அவர்கள் அமைக்கும் மரமேடையைச் சுற்றியுள்ள மரங்களில் எல்லாம் பழைய துணிகளைக் கட்டிவிடுகிறான்.

புலி அந்தத் துணிகளை கவனித்து, 'இது மனிதர்கள் நடமாடும் இடம்' என்று புரிந்துகொண்டு வராமல் இருக்கிறது. வேட்டைக்காரர்களுக்கு ஏமாற்றம். போய்விடுகிறார்கள்.

ஆனால், புலிக்கு சோதனை வேறு விதமாக ஆரம்பமாகிறது. காட்டில் வறட்சி வருகிறது. மான்கள் வேறு இடங்களுக்குப் போய்விடுகின்றன. காட்டுத்தீயால் மரங்கள் பல அழிந்து விடுகின்றன. புலியால் வேறு இடத்துக்கும் நகர முடியாது. அது பிறந்த வளர்ந்த இடம். சாப்பிட மான்கள் இல்லை. கீழே கிடக்கும் வண்டுகளையும் பூச்சிகளையும் சாப்பிடும் அளவுக்குப் பசி. அப்போது அந்தப் புலி, காட்டுக்குள் பயமில்லாமல் நீர் குடிக்கும் எருமை மாட்டைப் பார்க்கிறது. வேறு வழியில்லாமல் அதை அடித்துச் சாப்பிடுகிறது. எருமையின் மிச்ச பாகங்களை காட்டில் விட்டுச் செல்கிறது.

எருமைகள் குறைவதாகக் கவலைப்பட்டுத் தேடும் சோட்டுவுக்கும் நந்துவுக்கும் அதிர்ச்சி. ஊர் மக்கள் கொதிக்கின்றனர். அடுத்த சில நாட்களில், பசி தாளாமல் அந்தப் புலி இன்னொரு ஆண் எருமையையும் அடித்துச் சாப்பிடுகிறது.

ஊர் மக்கள் கொலைவெறியாகி புலியைப் பிடிக்க துப்பாக்கியோடு வருகிறார்கள். ஒரு குழு பெரிய பெரிய டிரம்களை அடித்து புலியை விரட்டுகிறது. புலி பதுங்கிப் பதுங்கி காட்டின் உள்ளே ஓடுகிறது.

காட்டைப் பிரிக்கும் ஆற்றைக் கடக்கும் பாலத்தில் துப்பாக்கியை வைத்துக்கொண்டு குறி பார்க்கிறான் நந்து. புலி வேறு வழியில்லாமல் பாலத்தில் ஏறுகிறது. நந்து சுடுகிறான். தோட்டா புலியின் உடலை உரச மட்டும்தான் செய்கிறது. புலி பயத்தில் ஆற்றுக்குள் விழுந்து விட, ஆறு அதை அடித்துச் செல்கிறது. ஆற்றில் விழுந்த புலி, அந்தப் பக்கக் காட்டுக்குச் சென்று மற்ற புலிகளோடு மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்தப் பக்கம் புலி ஒழிந்தது என்று கிராம மக்கள் கொண்டாடுகின்றனர். புலியின் உறுமல் கேட்காததால் மக்களுக்கு பயம் போய்விடுகிறது. வேகமாக காடுகளை அழிக்கிறார்கள். குடியிருப்புகள் பெருகுகின்றன. வளம் குறைகிறது.

புலி காட்டைப் பாதுகாத்தது; காடு புலியைப் பாதுகாத்தது. இப்போது புலி இல்லாமல் காடு அழிந்தது. காட்டை நம்பிய மனிதர்கள் திணறினார்கள். 'புலியால் நன்மையே அன்றி தீமை அல்ல' என்று மக்கள் புரிந்துகொண்டபோது புலி அக்காட்டில் இல்லை.

'எப்படி காடும் காட்டுயிர்களும் ஒன்றை ஒன்று பாதுகாத்து ஒட்டுமொத்தமாக மனிதர்களுக்கு நன்மை செய்கின்றன' என்பதை ஒரு படைப்பின் மூலம் ரஸ்கின் பாண்ட் மிக நுணுக்கமாக நம்மை சிந்திக்கச் செய்து விடுகிறார்.

– விஜயபாஸ்கர் விஜய்





# பிளாஸ்டிக் பெருங்கடல்!

குப்பை என்று அலட்சியமாகத் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பாட்டிலும் கேரி பேக்கும், வேறு வடிவமெடுத்து நம் உணவுத்தட்டில் வந்து உடலுக்குள் போய்ச் சேர்கிறது என்ற தகவலை உங்களால் நம்பமுடியாமல் இருக்கலாம். ஆனால், அதுதான் உண்மை. 'உலகெங்கும் கடல்களில் பெருமளவு பிளாஸ்டிக் குப்பைகள் போய்ச் சேர்ந்துள்ளன. அவை மீன்களால் சாப்பிடப்பட்டு, அந்த மீன்களைச் சாப்பிடும் மனிதர்களின் உடலிலும் போய்ச் சேர்கின்றன' என்ற அதிர்ச்சித் தகவல், தமிழகத்தில் நடைபெற்ற ஆய்வில் தெரியவந்துள்ளது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின்கீழ் செயல்படும் National Centre for Sustainable Coastal Management என்ற அமைப்பு, தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் ஓர் ஆய்வு மேற்கொண்டது. தமிழகத்தின் மிக நீண்ட கடற்கரையில் 25 இடங்களில் இந்த ஆய்வு நடைபெற்றது. சுற்றுலாத் தலங்களாக இருக்கும் கடற்கரைகள், நதிகள் கடலில் வந்து சேரும் முகத்துவாரங்கள், மீன்பிடி துறைமுகங்கள் என மூன்றுவிதமான இடங்களாக இந்தக் கடற்கரைகள் அமைந்திருந்தன.

இந்த 25 இடங்களில் சேர்ந்திருக்கும் மூன்றுவிதமான பிளாஸ்டிக் குப்பைகள் ஆய்வு செய்யப்பட்டன. தண்ணீர் பாட்டில் போன்றவை பெரிய பிளாஸ்டிக் குப்பைகளாகவும், சட்டை பட்டன் போன்றவை நடுத்தர பிளாஸ்டிக் குப்பைகளாகவும், சாதாரணமாக கண்களுக்குத் தெரியாத மிகச்சிறிய பிளாஸ்டிக் குப்பைகள் நுண்ணிய குப்பைகளாகவும் பிரிக்கப்பட்டன.

இந்த பிளாஸ்டிக் குப்பைகளில் காட்மியம், குரோமியம், தாமிரம், பேரியம், காரீயம், பாதரசம் மற்றும் துத்தநாகம் போன்ற ஆபத்தான வேதிப்பொருட்கள் கலந்திருக்கின்றன. சூரிய வெளிச்சம் இந்த பிளாஸ்டிக்குகள்மீது படும்போது, இந்த வேதிப்பொருட்கள் சிதைந்து கடல்நீரில் கலக்கின்றன. இதனால் மீன்களின் உடலிலும் இந்த வேதிப்பொருட்கள் சேர்கின்றன.

தொடர்ச்சியாக சூரிய வெளிச்சம்







படுவதாலும், கடலின் உப்புநீரால் அரிக்கப்படுவதாலும், அலைகளின் வேகத்தில் அலைக்கழிக்கப்படுவதாலும், கடலில் சேரும் இந்த பிளாஸ்டிக் குப்பைகள் சிறுசிறு துண்டுகளாக சிதைந்துவிடுகின்றன. இப்படி இவை சிதைவதால்தான் ஆபத்து. ஐந்து மில்லிமீட்டர் அளவுக்கும் குறைவான துண்டாக சிதையும் பிளாஸ்டிக்கை, 'உணவு' என நினைத்து மீன்கள் சாப்பிட்டுவிடுகின்றன. இது அப்படியே மீன்களின் குடலில் தங்கிவிடுகிறது. இது, இந்த மீன்களைச் சாப்பிடும் மனிதர்கள் உடலிலும் சென்று சேர்கிறது.

''குறிப்பாக நதிகள் கடலைச் சென்றுசேரும் இடத்தில்தான் பிளாஸ்டிக் அதிகம் கடலில் கலக்கிறது. தமிழக நதிகளில் எப்போதாவதுதான் தண்ணீர் வருகிறது. ஆனால், காய்ந்துகிடக்கும் நதிப்படுகைகளில்தான் அதிகமாக பிளாஸ்டிக் குப்பைகள் கொட்டப்படுகின்றன. மழை நாட்களில் தண்ணீருடன் சேர்த்து இவை கடலுக்கு அடித்துச் செல்லப்படுகின்றன. கடலின் அடிப்பரப்பில் வளரும் கடல் தாவரங்கள் மற்றும் பாசிகளிலும் இவை படிந்துவிடுகின்றன. இந்தப் பாசிகளை மீன்கள் உண்ணும்போது, மீன்களின் உடலில் இவை சேர்கின்றன'' என்கிறார், இந்த ஆராய்ச்சியைச் செய்த அமைப்பின் இயக்குநர் ரமேஷ்.

தமிழக மக்களால் அதிகம் விரும்பி உண்ணப்படும் ஐந்து வகை மீன்கள் இந்தக் கடல்பகுதிகளில் பிடிக்கப்பட்டன. அப்படிப் பிடிக்கப்பட்ட 79 மீன்களில் பத்து சதவிகித மீன்களின் குடல்களில் பிளாஸ்டிக் கழிவுகள் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

அலையடித்து கரையில் ஒதுங்கும் குப்பைகளையும் இந்தக் குழு ஆராய்ச்சி செய்தது. இவற்றில் பிளாஸ்டிக் துண்டுகள்தான் அதிகம். கிட்டத்தட்ட 50 சதவிகிதம் இவைதான் இருந்தன. பிளாஸ்டிக் இழைகள் சுமார் 24 முதல் 27 சதவிகிதம் இருந்தன. படுக்கைகள் மற்றும் நாற்காலிகளில் உபயோகிக்கப்படும் செயற்கைப் பஞ்சுகள் 10 முதல் 19 சதவிகிதம் இருந்தன.

கடலில் இருக்கும் நுண்ணிய பிளாஸ்டிக் குப்பைகளை இந்த ஆய்வு மூன்று வகைகளாக இனம் கண்டுள்ளது. பாலி எத்திலீன், பாலி புரோப்பலீன் மற்றும் பாலிஸ்டைரின் ஆகியவையே இவை. பாலி எத்திலீன் என்பது பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகள் மற்றும் மெல்லிய பிளாஸ்ட்க் ஷீட்கள் செய்யப் பயன்படுத்தப்படும் வேதிப்பொருள். பாலி புரோப்பலீனின் பயன்பாடு பரவலானது. விளையாட்டுக் கருவிகள், தரைவிரிப்புகள், ஃபர்னீச்சர்கள், குழாய்கள் மற்றும் மீன்வலைகள் போன்றவை இந்த வேதிப்பொருளை வைத்தே செய்யப்படுகின்றன. பாலிஸ்டைரின் பெரும்பாலும் ஜவுளித் தொழிலில் உபயோகப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மாநகரை பெருவெள்ளம் மூழ்கடித்தபோது பல வீடுகளில் வெள்ளநீர் நுழைந்தது. அந்தத் தண்ணீரில் பிளாஸ்டிக் குப்பைகளும் சேர்ந்து வீடுகளுக்குள் வந்தன. 'நாம் நதிகளில் கண்டபடி குப்பை போட்டு அவற்றை நாசப்படுத்தியதை நினைவூட்ட நதி நம் வீடுகளுக்கு வந்தது' என்று அப்போது சொன்னார்கள்.

கடலும் இப்படித்தான். 'எல்லா குப்பைகளையும் கடல் செரித்துக்கொள்ளும்' என்ற நம்பிக்கையில் கடலுக்கு அனுப்புகிறோம். உலகின் எல்லா கடல்களையும் பிளாஸ்டிக் பெருங்கடல்கள் ஆக்குகிறோம். ஆனால், அந்தக் கடல்கள் 'இந்த பிளாஸ்டிக்கை நீங்களும் தின்று செரித்துக்கொள்ளுங்கள்' என்று மீன்களில் கலந்து அனுப்புகின்றன. இனி, விழிப்படைய வேண்டியது நாம்தான்!



# பறவைகள் மீதான அன்பு பெரியது!

சூழலியல் பாதுகாப்பு என்பது வெறுமனே அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் தொடர்புடையது மட்டுமே இல்லை. சாமானியர்களின் பங்களிப்பு எப்போது சாத்தியமாகிறதோ, அப்போதுதான் இந்த பூமி காப்பாற்றப்படும். இதைத்தான் பல சூழலியல் செயல்பாட்டாளர்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

சூழலியலில் படித்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள், ஆர்வலர்கள் ஆகியோருடன் ஆங்காங்கே உருவாகி வரும் சாமானியர்கள் இதற்காக சிறப்பான பங்களிப்பைச் செய்து வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் பிரசித்தி பெற்றது. அங்கு சுற்றுலாவுக்கும் ஆய்வுக்கும் செல்லும் பலருக்கு வழிகாட்டியாக இருப்பவர் பால் பாண்டியன். கூந்தன்குளம் கிராமத்தைச் சேர்ந்த பால் பாண்டியன் என்ற சாமானியருக்கு அங்கு என்னென்ன பறவைகள் வருகின்றன, எந்தப் பகுதியிலிருந்து வருகின்றன, அந்தப் பறவைகளின் ஆங்கில மற்றும் தமிழ்ப் பெயர்கள் என்ன, அவற்றின் இயல்புகள் என்ன போன்ற அத்தனை விவரங்களும் தெரியும். இளம் வயதில் கூட்டிலிருந்து கீழே விழுந்த பறவையை காப்பாற்றப்போய், அதையே வாழ்க்கை முழுவதும் செய்துகொண்டிருப்பவர் பால் பாண்டி.



‘‘நான் எட்டாவது படிக்கும்போது, மரத்திலிருந்து மூணு மஞ்சள் மூக்கு நாரைகள் கீழே விழுந்து கால்களை முறித்துக்கொண்டன. எனக்கு அதைப் பார்த்து பதறிப் போச்சு. அதுகளை வீட்டுக்கு எடுத்துட்டுப் போய், மீன் பிடிச்சி போட்டேன். சில நாள்கள்ல அதுங்க தேறி வந்ததுங்க. அந்த வருஷம் சூறைக் காற்றோடு பயங்கர மழை பெய்தது. காத்துல தூக்கி அடிக்கப்பட்டு அதுங்க செத்துப் போச்சுதுங்க. எங்களுக்கு பெரிய வசதியெல்லாம் கிடையாது; நாங்களே வெளியிலதான் தூங்குவோம். அதுங்களை காப்பாத்த முடியலைன்னு ரொம்ப அழுதேன்.

இப்படி பறவைகள் கீழே விழுந்து செத்துப் போறது அடிக்கடி நடக்கற விஷயமா இருந்துச்சு. இதுங்களை காப்பாத்த யாருமே இல்லையேன்னு தோணுச்சு. நம்மால் முடிஞ்சதைச் செய்வோம்னு, அடிபடற குஞ்சுகளை காப்பாத்த ஆரம்பிச்சேன்.

அப்போ பள்ளிக்கூடத்துக்கு ஏழு கிலோ மீட்டர் நடந்து போகணும். மத்த பசங்க சைக்கிள்ல போவாங்க. நான் நடந்தே போய், நடந்தே வருவேன். கூடவே தூண்டில் ஊசியும் பையும் எடுத்துட்டுப் போவேன். பள்ளி விட்டு வரும்போது மீனை பிடிச்சிட்டு வருவேன். நான் வளர்க்கிற குஞ்சுகளுக்குப் போடுவேன். அடுத்த மூணு வருஷம் இப்படிச் செய்தேன். இது என்னோட வேலையாகவே பின்னாடி மாறிடுச்சி. இதுவரைக்கும் இப்படி அடிபட்ட நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகளை எடுத்து வளர்த்து விட்டிருக்கேன்'' என ஒரு சிறுவனுக்குரிய வாஞ்சையுடன் தன்னைப் பற்றிய அறிமுகத்தைச் சொல்கிறார் பால் பாண்டியன்.

கூந்தன்குளம் கிராமத்தில் உள்ள குளம் பல நீர்வாழ் உயிரினங்களுக்கு வாழிடத்தை ஏற்படுத்தித் தருகின்றன; இந்தக் குளத்தைச் சுற்றியுள்ள மரங்கள், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வரும் பறவைகளுக்கும் வெளிநாட்டுப் பறவைகளுக்கும் வாழிடத்தை அமைத்துத் தருகின்றன. கூழைக்கடா, பூநாரை, கரண்டிவாயன், நீர்காக்கை (மூன்று வகை), செங்கால்நாரை, பாம்புதாரா, செண்டுவாத்து, புல்லிமூக்கு வாத்து, நத்தைக்கொத்திநாரை, அரிவாள் மூக்கன் (மூன்று வகை), நாமக்கோழி, கானாங்கோழி, சாம்பல்நாரை, சாரை நாரை, முக்குளிப்பான், சம்புக்கோழி, பட்டைத்தலை வாத்து என 174 வகையான பறவைகள் இங்கே வருவதாக பால் பாண்டியன் சொல்கிறார்.




''ஒருமுறை எங்க ஊருக்கு பறவையியலாளர் சலீம் அலியின் நண்பர் வந்திருந்தார். அவர் என்னோட ஆர்வத்தைப் பார்த்து, சலீம் அலியின் பறவைகள் பற்றிய கையேட்டை பரிசா கொடுத்தார். அதைப் பார்த்துதான் பறவைகளோட பெயர்களைத் தெரிஞ்சுக்கிட்டேன். அப்புறம் நானே பறவைகளைக் கண்டறிய ஆரம்பிச்சேன். அதுங்களோட பழக்கவழக்கங்கள், கூடு கட்டும் முறை, எத்தனை முட்டை இடும், அடைகாப்பது ஆண் பறவையா பெண் பறவையா, எத்தனை நாள் அடை காக்கும், குஞ்சுகளோடு நிறம் எப்படி இருக்கும், வளர்ந்த பிறகு என்ன நிறமா மாறும்னு அத்தனை தகவல்களும் இப்ப எனக்குத் தெரியும். ஆய்வுக்காக இங்க வர்ற பலருக்கு நான் வழிகாட்டியாகவும் இருக்கேன். காலேஜ் படிப்பெல்லாம் படிக்காதவன் என்றாலும், வெளிநாட்டுக்காரங்ககூட நான் சொல்றதைக் கருத்தா கேட்பாங்க'' என்கிறார் பால் பாண்டியன்.

இவருடைய பணிகளை அங்கீகரித்து சர்வதேச சூழலியல் அமைப்புகளும், உள்நாட்டு அமைப்புகளும் இவருக்குப் பல விருதுகளை அளித்துள்ளன. கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தைக் காப்பதில் பால் பாண்டியனின் பங்களிப்பைப் பாராட்டி, தமிழக அரசு இவருக்கு சரணாலய உதவியாளர் வேலையை அளித்தது. 2012–ம் ஆண்டில் ஓய்வுபெற்றாலும், தற்போதும் அந்தப் பணியை அரசின் உதவியுடன் செய்துவருகிறார். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பால் பாண்டியன், பெரும்பாலான நேரங்களில் கால் ஒடிந்து பறக்க இயலாத பறவைகளுக்கு தன் சொந்தப் பணத்திலிருந்து மீன் வாங்கிப் போடுவதாகச் சொல்கிறார்.

''எங்க ஊர் மக்களும் பறவைகளை அன்பாதான் பார்ப்பாங்க. தீபாவளிக்கு நாங்க யாரும் பட்டாசு வெடிக்க மாட்டோம். பறவைகள் எங்கள் மக்களோட இயல்பா பழகுங்க. பறவைகளை வேட்டையாடறது, அதுங்களை விரட்டறதுன்னு எந்த தொந்தரவையும் யாரும் தரமாட்டாங்க. பறவைகள் எங்க ஊருக்கு வர்றது ஊருக்கு நல்லதுன்னு சொல்வாங்க. எப்படின்னா, நல்லா மழை பெஞ்சதுன்னா, கருமேனி ஆத்துலேர்ந்து குளத்துக்கு நிறைய தண்ணீர் வரும். தண்ணீர் இருந்தாதான் பறவைகள் வரும். தண்ணீரில் பறவைகளோட எச்சமும் கலந்து, அந்தத் தண்ணீரே உரமாகும். அதனால ஊர்ல விளைச்சல் அதிகமாகும். இதைப் புரிஞ்சுக்கிட்டுதான் பறவைகளை ஊர் மக்கள் கொண்டாடறாங்க.''


பால் பாண்டியனுக்கு ஊர் மக்கள் மட்டுமல்லாது, அவருடைய குடும்பமும்கூட உறுதுணையாக இருக்கிறது. 'என் மனைவி வள்ளித்தாயின் பங்களிப்பும் ஆதரவும் இல்லாவிட்டால், 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பணியை செய்திருக்க முடியாது' என்கிறார். இவர்கள் இருவரையும் குறித்து 'வள்ளித்தாய்' என்கிற பெயரில் மலையாளத்தில் சூழலியல் ஆர்வலர்கள் சிலர் ஆவணப்படம் ஒன்றை எடுத்திருக்கிறார்கள்.

இந்தத் தம்பதியினர், சரணாலய உதவியாளர்களாக பணியாற்றிய நேரத்தில் நூற்றுக்கணக்கான மரங்களை நட்டு வளர்த்திருக்கிறார்கள். அதற்காகக் கேரள அரசின் விருது இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. வள்ளித்தாய் இறந்துவிட்ட நிலையில், பால் பாண்டியன் தொடர்ந்து தன் பணிகளைச் செய்துவருகிறார். ''பணக்கஷ்டம் இருக்கத்தான் செய்யுது. ஆனா, எல்லாத்துக்கும் மேல இந்த பறவைகள் மேல இருக்கும் அன்பு பெருசு. இப்போ எனக்கு 65 வயசாகுது. இன்னும் சில நூறு மரங்களை நட்டுப் பராமரிக்கணும். நான் தெரிஞ்சுக்கிட்ட தகவல்களை பல நூறு பேருக்கு சொல்லிக்கொடுக்கணும். கடைசிவரைக்கும் இந்தப் பறவைகளை பார்த்துக்கிட்டே வாழணும்'' என்று முடிக்கிறார் நெகிழ்ச்சியாக.

– மு.வி.நந்தினி

அகரத்தின் கல்விப்பணிகளில் ஓர் அங்கமாக, 2010-ம் ஆண்டு தொடங்கப்பட்டது 'விதை திட்டம்'. உயர்கல்விக்கு உதவும் நன்கொடையாளர்களுக்கும், தகுதியுள்ள மாணவர்களுக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுவதுதான் இந்தத் திட்டத்தின் சிறப்பு. இந்த மாணவர்களின் கல்விப் பயணம் வெற்றிகரமாக முடிவடைய அகரம் அறக்கட்டளை உதவுகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 1,952 மாணவர்களின் பட்டப்படிப்புக் கனவுகளை நிறைவேற்றியுள்ளது இந்தத் திட்டம். ஒன்பதாம் ஆண்டுக்கான மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுவருகிறார்கள்.

விதை திட்டத்தில் முக்கியமான பணி, இல்ல நேர்காணல். இந்தத் திட்டத்தில் பங்கேற்று படிக்க விரும்பி விண்ணப்பிக்கும் மாணவ, மாணவிகளின் வீடுகளுக்குச் சென்று கள ஆய்வு செய்யும் பணி இது. அகரம் தன்னார்வலர்கள் இதை அர்ப்பணிப்போடு செய்கிறார்கள். இப்படிச் சென்ற பல தன்னார்வலர்கள், தங்கள் கள அனுபவங்களை எழுதித் தந்துள்ளார்கள். அவற்றில் ஒன்று...



# மரியாதைக்குரிய

திருவண்ணாமலை மாவட்டத்தில் எங்களுக்குக் கொடுக்கப்பட்டவை, மூன்று மாணவிகளின் வீடுகள் மற்றும் ஒரு மாணவர் வீடு. இதில் ஒருவரின் முகவரி மற்றும் தகவல்கள் சரியாக இல்லை. அவர் எழுதிய ஒற்றைக் கடிதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு கிளம்பியாகிவிட்டது. ஒரு மாணவி அகரம் அலுவலகத்துக்கு தொலைபேசியில் அழைத்து, தன்னை எப்படியாவது படிக்க வைக்கும்படி அழுதார். அவர் பெயரைக்கூட சரியாக அறிய இயலவில்லை. பெயர் தெரியாத அந்த மாணவியின் குடிகாரத் தந்தையிடம் மட்டுமே அலைபேசி உள்ளது. ஆனால், அவர் போதையில் இருக்கும்போது சரியாக பதில் அளிக்கமாட்டார். அவர் குடிக்காமல் தெளிவாக இருக்கும் நேரம் மிகக் குறைவு. நாங்கள் பார்க்கச் சென்ற மாணவரின் அலைபேசியோ அணைத்து வைக்கப்பட்டுள்ளது.



காலை உணவு மட்டும் சாப்பிட்டுவிட்டு முதல் மாணவியின் வீட்டுக்குச் சென்றாகிவிட்டது. முகவரி மற்றும் தொலைபேசி எண் சரியாகத் தெரிந்த ஒரே வீடு அதுதான். அந்த மாணவியின் தந்தை பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டார். அந்த மாணவியின் சகோதரி, வேறொருவரின் உதவியால் இப்போதுதான் கல்லூரிப் படிப்பை முடித்துள்ளார். அம்மாவும் பாட்டியும்தான் கஷ்டப்பட்டு அவர்களை வளர்த்து ஆளாக்குகின்றனர் என்பதையும் தெரிந்துகொள்ள முடிந்தது.

மற்றொரு மாணவியின் வீட்டுக்குக் கிளம்ப அந்த ஊரின் பெயரை விசாரித்தபோதுதான் தெரிந்தது, அந்த ஊர் முதல் மாணவியின் வீட்டிலிருந்து 10 நிமிட பயணத்தில் உள்ள ஊர் என்று. அந்த மாணவியின் வீட்டுக்குச் சென்றபோது அவரின் தந்தை இல்லை. அவர் கடன் தொல்லைக்கு பயந்து சென்னையில் வேலை செய்கிறார். எப்போதாவதுதான் வீட்டிற்கு வருவார். சரியான குடிகாரர். அவர்களின் உறவுக்காரர் ஒருவர்தான் அந்த மாணவிக்காக அகரம் அறக்கட்டளையை அணுகியுள்ளார். சொந்த வீடு மட்டும்தான் அந்தக் குடும்பத்துக்கு இருக்கும் ஒரே நிம்மதி. அம்மாவின் உழைப்பால்தான் அந்த மாணவி படிக்கிறார். நர்சிங் படித்து மக்களுக்குச் சேவை செய்ய விரும்புவதாக அந்த மாணவி உற்சாகமாகக் கூறினார்.

நாங்கள் பார்க்க வேண்டிய மூன்றாவது மாணவியின் பெயர் தெரியாது, அவரின் அப்பா பெயர் மட்டும்





# அம்மாக்கள்!

தெரியும். அந்த அப்பாவோ எவ்வளவு முறை அழைத்தும் தன் போனை எடுக்கவில்லை. ஆனாலும், கிளம்பிவிட்டோம் அவர் கிராமத்தை நோக்கி. பேருந்தில் திருவண்ணாமலைக்குச் சென்று, அங்கிருந்து அந்த மாணவியின் ஊருக்குச் செல்வதாகத் திட்டம். பேருந்தில் போகும்போதே தொடர்ச்சியான பல அழைப்புகளுக்குப் பின் அந்த மாணவியைத் தொடர்புகொள்ள முடிந்தது.

அவரின் முகவரி மற்றும் அங்கு போகும் வழியை கேட்டுக்கொண்டு இருக்கும்போது, எங்கள் முன் இருக்கையில் இருந்த ஒருவர் திடீரென்று எங்களைப் பார்த்தார். ''இந்த ரூட்ல போனா, நீங்க போறதுக்கு இன்னும் ரொம்ப நேரம் ஆகும். கரும்பு லாரியில வேற வழியில போனா, சீக்கிரம் போயிடலாம்'' என்றார். எங்கள் பேருந்தின் முன்னால் போன கரும்பு லோடு லாரியைக் காட்டி, அதில் எங்களை ஏற்றிவிடுவதாகச் சொன்னார். பேருந்தின் ஓட்டுனரிடம் போய், அந்த லாரியைத் தாண்டிச் செல்லச் சொன்னவர், பேருந்து தாண்டும்போது லாரி ஓட்டுனரிடம் பேசி, அடுத்த நிறுத்தத்தில் நிற்கச் சொன்னார். நாங்கள் அவரோடு அங்கு இறங்கினோம். எங்களை லாரியில் ஏற்றி விட்டவர், நாங்கள் அவரின் உறவுக்காரர்கள் என்றும் எங்களை சரியான இடத்தில இறக்கி விடும்படியும், காசு எதுவும் வாங்கக் கூடாதென்றும் லாரி டிரைவரிடம் சொன்னார். அந்த பெயர் தெரியாத எங்கள் புது உறவுக்காரரின் உதவியால் நான்காம் மாணவி வீட்டுக்குச் சென்றோம்.

அந்த வீட்டில் அரசாங்கம் கொடுத்த அத்தனை இலவச மின்சாதனப் பொருட்கள் இருந்தாலும், எதையும் உபயோகப்படுத்த முடியாது. வீட்டில் ஒளிர்வது ஒரே ஒரு மின்சார விளக்குதான். பத்து அடிக்கு பத்து அடி அளவில் இருக்கும் வீட்டில் இருப்பதோ நான்கு பேர். நல்லவேளையாக அந்த மாணவியின் தந்தை குடிக்காமல் இருந்தார். அதனால், மாணவியை மேற்கொண்டு படிக்க வைப்பதாகக் கூறினார். எதையோ சாதித்த திருப்தியுடன் திருவண்ணாமலை பேருந்து நிலையத்தை சென்றடைந்தபோது மாலை 5 மணி.

ஒவ்வொரு இல்ல ஆய்வும் ஓர் அனுபவம், சில சமயங்களில், 'இப்படிப்பட்ட பொறுப்பற்ற தந்தைகள் இருப்பதால்தானே அகரம் தேவைப்படுகிறது' என்கிற சமுதாயக் கோபம் எழும். கணவன் இல்லாமல் தங்கள் குழந்தைகளை பொறுப்பாக வளர்க்கும் அம்மாக்களைக் காணும்போது வரும் மரியாதையில், அந்தக் கோபம் கரைந்துவிடும். பயணங்களில் உதவி செய்யும் பெயர் தெரியாத நல்லவர்கள் இன்னும் நம்மில் பலர் இருக்கின்றனர் என்ற பெருமிதம் ஒருபுறம்... நகரத்து மாணவர்களுக்குக் கிடைக்கும் எந்த வசதிகளும் இல்லாமல், இத்தனை கஷ்டங்களிலும் நன்கு படித்து தான் முன்னேறவேண்டும் என்று கனவு காணும் மாணவர்களைக் காணும்போது வரும் மகிழ்ச்சி மறுபுறம்... நாம் இன்னும் தேடிச் செல்ல வேண்டியவர்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள் என்ற பொறுப்பு உணர்வு வந்து சேர்ந்துகொள்கிறது.

– மார்க்கண்டன்.எஸ்



அசத்தும் அரசுப் பள்ளி

# ஆசிரியர் என்பவர் வழிகாட்டி!

'நல்ல ஆசிரியர் ஒரு விளக்கைப் போல, மற்றவர்களுக்கு ஒளியாய், வழிகாட்டியாய் இருப்பார்!'

**– துருக்கியின் பிதாமகர் முஸ்தபா கேமல்**

தாய், தந்தைக்குப் பிறகு, ஒரு குழந்தையை நல்லதொரு மனிதனாக செதுக்கும் கடமை ஆசிரியருக்குத்தான் உண்டு. அதை உணர்ந்து செயல்படும் ஆசிரியர்கள், வணக்கத்துக்குரியவர்கள். அவர்களில் வசந்தனும் ஒருவர். தான் செல்லும் திசையெங்கும் விதைகளைத் தூவிவிட்டு காடுகளை உருவாக்கிச் செல்லும் பறவையைப் போல, வசந்தனின் செயல்பாடும் இருக்கிறது.

''இடைநிலை ஆசிரியராகப் பணியாற்ற கீழப்பாலையூர் தொடக்கப்பள்ளிக்கு வந்தபோது நல்லாசிரியராக இருக்க வேண்டும் என்கிற கனவு இருந்தது. ஆனால் என்னை வழிநடத்தியது மாணவர்களின் தேவைகள்தான். 'ஏன் சார், எங்களுக்கு அந்த ஸ்கூல்ல இருக்கிற மாதிரி டாய்லெட் இல்ல? சுத்தமான கிளாஸ் ரூம் இல்லை? எங்களால பரதநாட்டியமெல்லாம் கத்துக்க முடியாதா? நாங்க ஏழையா பிறந்ததாலதான் இதெல்லாம் எங்களுக்குக் கிடைக்கலையா?' என அந்த மாணவர்கள் கேட்டது என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது'' என்கிற வசந்தன், அதன்பின் பள்ளியை மேம்படுத்தும் பணியில் இறங்கியிருக்கிறார்.

வழக்கம் போல மேம்பாட்டுப் பணிகளுக்காக வேண்டிய நிதியை தெரிந்தவர்கள், நன்கொடையாளர்கள், அறக்கட்டளைகள், நண்பர்கள் மூலம் பெற்றிருக்கிறார்.

''மெதுமெதுவாக மாற்றங்களைச் செய்ய ஆரம்பித்தோம். கழிப்பறை கட்டினோம். வண்ணம் பூசினோம். ஏ.சி., இன்டர்நெட் வசதியுடன் கம்ப்யூட்டர் சென்டர் அமைத்தோம். முதலில் இந்தப் பள்ளி தொடக்கப்பள்ளியாக மட்டுமே இருந்தது. இந்த ஊர் மணிமுத்தாறுக்கும் வெள்ளாறுக்கும் இடையே உள்ளது. மேல்நிலை வகுப்புக்குச் செல்ல வேண்டும் என்றால் இரண்டு ஆற்றையும் கடந்து, இரண்டு பஸ்களில் ஏறிச் செல்ல வேண்டும். அதனால் பல குழந்தைகளின் படிப்பு பாதியிலேயே முடியும் நிலை. பள்ளிக்கல்வித் துறை செயலாளரிடம் பேசி உயர்நிலைப் பள்ளியாக இதை மாற்றினோம்'' என்றவர், 'பள்ளியின் சூழலும் படிப்பும் மட்டும் ஒரு மாணவரின் எதிர்காலத்தைத் தீர்மானித்துவிடாது, அதற்குக் குடும்பச்சூழல் சரியாக இருப்பதும் அவசியம்' என்கிறார்.

''குடிப்பழக்கத்துக்கு ஆளான தந்தைகளால் மனரீதியாக பாதிக்கப்பட்ட பல மாணவர்கள் இங்கு படிக்கிறார்கள். அவர்கள், இந்த நிலை மாறவேண்டும் என

விரும்பினார்கள். அவர்களுக்காக ‘அன்புள்ள அப்பா’ என்ற திட்டத்தைக் கொண்டுவந்தோம். அப்பாவிடம் நேரில் பேசத் தயங்குகிற மாணவர்கள், கடிதம் எழுதுவார்கள். அப்பா கைவிட வேண்டிய பழக்கம் குறித்து அந்தக் கடிதம் மூலம் மாணவர்கள் தெரிவிப்பார்கள். இது அப்பாக்களை குடிப்பழக்கத்திலிருந்து மீட்டெடுக்க உதவியது.

மாணவர்களின் அம்மாக்களை அழைத்துப் பேசினோம். குடியின் கேடுகளை விளக்கி விழிப்பு உணர்வு நாடகம் போட்டோம். 35 பேர் குடியை நிறுத்தினார்கள். மற்றவர்கள் குடித்துவிட்டு வந்து வீட்டில் பிரச்னை செய்வதில்லை என்கிற நிலைக்கு வந்தார்கள். இந்தத் திட்டத்துக்காக விருதும் கிடைத்திருக்கிறது. ஆனால், பலரிடமிருந்து எதிர்ப்புகளையும் சந்தித்தோம்’’ என விருதுகளோடு தனக்குக் கிடைத்த எதிர்ப்புகளையும் நேர்மையோடு பதிவு செய்கிறார் வசந்தன்.

‘சமூக அக்கறையோடு பணியாற்றுகிறவர்களுக்கு இத்தகைய எதிர்ப்புகள் வருவது இயல்பானதுதான். என்றாலும், இத்தகைய எண்ணத்தோடு இருக்கிற ஆசிரியர்களை இதுபோன்ற எதிர்ப்புகள் பல நேரங்களில் சோர்வு கொள்ள வைக்கின்றன’ என சொல்கிறார். ‘‘ஒரு ஆசிரியர் சமூக அக்கறையோடு செயல்படுவதை, சில ஆசிரியர்கள் ஈகோவுடன் அணுகுவதும் நடக்கிறது’’ என்கிறார் வசந்தன்.

‘‘இப்போது பணியாற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள கீரனூர் பள்ளிக்குக் கடந்த ஜூலை மாதம் விருப்ப மாறுதலில் வந்தேன். என்னுடைய முயற்சியில் கீழப்பாலையூர் பள்ளிக்கு கணினி மையம் அமைக்கும் பணி தொடங்கி, இப்போதுதான் முடிந்தது. கணினி மையத்தை அந்தப் பள்ளியில் வருடம் (மாதச் சம்பளம் அல்ல!) ரூ. 1,450 சம்பளம் வாங்கிக்கொண்டு சுத்தம் செய்யும் துப்புரவுப் பணியாளராக உள்ள கோசலை அம்மாளைக் கொண்டு திறப்பு விழா நடத்தினேன். இந்தப் பள்ளிக்காக இரவு பகலாக பணியாற்றும் அவரைக் காட்டிலும் வேறு எவரும் தகுதியானவராக இருக்க முடியாது. பள்ளியின் தலைமை ஆசிரியர் இதற்கு ஒப்புக்கொண்டாலும், பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். திறப்பு விழாவை நடத்தி, கோசலை அம்மாளுக்கு சிறு




தொகையை திரட்டிக் கொடுத்தேன். நான் பணியாற்றும் பள்ளி என்று மட்டுமல்ல, உதவி தேவைப்படும் பல அரசு பள்ளிகளுக்கு முடிந்த உதவிகளைச் செய்துகொண்டிருக்கிறேன்’’ என்கிறார் வசந்தன்.

சுத்தமான பள்ளி வளாகம், ஸ்மார்ட் வகுப்பறை, தனிப்பட்ட திறமைகளை ஊக்குவிக்கும் பயிற்சிகள் என அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தங்களை மேம்படுத்திக்கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் வசந்தன்.

‘‘படிப்பின் மூலம் முன்னேற முடியாதவர்கள், தங்களுடைய தனிப்பட்ட திறமைகள் மூலம் வாழ முடியும். இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க சிலம்பம், கராத்தே, பரதநாட்டியம், பேச்சுப் பயிற்சி போன்றவற்றைச் சொல்லித் தருகிறோம். முடிந்தவரை பள்ளியில் படித்து முடிக்கும் மாணவர்களை, அவர்கள் அடுத்தடுத்து என்ன படிக்கிறார்கள் என கவனிக்கிறேன். பிளஸ் 2 முடித்தவர்கள் என்ன செய்கிறார்கள், தோல்வியுற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என விசாரித்துத் தெரிந்துகொள்வேன். படிக்க வசதியில்லாத, ஆனால் சிறப்பாகப் படிக்கும் எட்டு பேருக்கு, அகரம் பவுண்டேஷன் உதவியுடன் பொறியியல் படிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறேன்’’ என்கிற வசந்தனின் பணிகளை சிறப்பித்து புதிய தலைமுறை, ஆனந்த விகடன் போன்ற ஊடகங்கள் விருது கொடுத்துள்ளன.

விருதுகளைவிடவும் மக்களின் அங்கீகாரமே தனக்குப் பெருமகிழ்ச்சியை அளிப்பதாகச் சொல்கிறார் வசந்தன். கடலூரில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது செய்த நிவாரண உதவிகளுக்காக, மக்கள் தன்னை உறவாகப் பார்ப்பதாகச் சொல்கிறார் வசந்தன்.



துருக்கியின் பிதாமகர் சொன்னது போல, வசந்தன் போன்ற ஆசிரியர் வழிகாட்டியாய் உள்ளபோது, அவரிடம் பயிலும் மாணவர்கள் தங்களுக்கான பாதையை அறிந்துகொள்கிறார்கள்.

**– மு.வி.நந்தினி**



குழந்தைகளுக்கான கதைகளும் பெரியவர்களுக்கான நீதிகளும் 8

◆ பேராசிரியர் ச.மாடசாமி

# கதைகள் மட்டும் போதுமா?

## ஆகஸ்ட் 6 – ஹிரோஷிமா நினைவு நாள்

கதை கேட்டுப் பழகிய குழந்தை, ஒரு திடீர்த் திருப்பத்துக்காகக் காத்திருக்கிறது. கதை சொல்பவருக்கும் இது புரிந்திருக்கிறது. அதனால்தான், ''அப்ப டுமீல்னு ஒரு சத்தம்'' என்கிறார் கதை சொல்பவர். ''பார்த்தா, கண்ணக் கூசுற மாதிரி வெளிச்சம்'' என்கிறார். ''ராஜா உக்காந்திருந்தார்ல... அந்த நாற்காலி திடீர்னு ஆட ஆரம்பிச்சுச்சு'' என்கிறார். ''எல்லோரும் டொம் டொம்னு விழுந்திட்டாங்க'' என்கிறார்.

கதை சூடு பிடிக்கிறது. கதையில் ஒன்றிப் போய், குழந்தை உட்கார்ந்திருக்கிறது. கவனம் சிதறாமல் குழந்தையைக் கதையோடு கட்டிப் போட, ஒரு திடீர்த் திருப்பம் உதவுகிறது.


கதைகளில் மட்டும்தானா திருப்பங்கள்? வாழ்க்கையில், வரலாற்றில் திருப்பங்கள் குறைவாகவா இருக்கின்றன? இதோ வரலாற்றிலிருந்து ஒரு சம்பவம்...

'காலை 8.15 மணி. வீட்டில் எல்லோரும் உணவருந்திக்கொண்டு இருந்தார்கள். அப்போது திடீரென்று வெளிச்சம். ஆரஞ்சு நிற வெளிச்சம்! ஆயிரம் மின்னல்கள் ஒரே நேரத்தில் வெட்டி மின்னியது போன்ற வெளிச்சம். வெளிச்சத்தைத் தொடர்ந்து வீடுகள் கிடுகிடுவென்று ஆடிச் சரிந்தன. நொறுங்கிய வீடுகளின் இடிபாடுகளுக்குள் மனிதர்கள் சிக்கிக் கிடந்தார்கள். எங்கு பார்த்தாலும் தீ... புகை!'

இது கற்பனைக் கதையா? இல்லை. 1945 ஆகஸ்ட் 6 காலை 8.15 மணிக்கு ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரில் நிகழ்ந்த கொடுமை. திருப்பமும் துயரமும் நிறைந்த இந்தச் சம்பவத்தைச் சிறார்களுக்குச் சொல்லலாமா?

குழந்தைகளுக்குக் கதை சொல்லவேண்டும் என்பது சரி; கதை மட்டுமே சொல்லவேண்டும் என்பது எப்படிச் சரி?

இப்படி யோசித்தவர் ஜப்பான் எழுத்தாளரும் ஓவியருமான மாருகி தோசி. ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் அமெரிக்கா வீசிய அணுகுண்டுகள் பல்லாயிரக்கணக்கானோர் உயிரைப் பறித்தன;





லட்சக்கணக்கானோரை நடைபிணங்களாக்கின.

இந்தக் கொடூரம் நிகழ்ந்து எட்டாண்டுகளுக்குப் பின் 1953–ல் ஓர் ஓவியக் கண்காட்சி ஜப்பானின் சிறிய நகரமொன்றில் நடந்தது. அணுகுண்டு விளைவித்த துயரங்களே கண்காட்சியின் கருப்பொருள். தோசியும் அவர் கணவரும் வரைந்த ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அந்தக் கண்காட்சியில் தோசி, ஒரு பெண்ணைச் சந்தித்தார். அழுகையும் குமுறலுமாய் அந்தப் பெண் தன் வரலாற்றைச் சொன்னாள். நெஞ்சை உருக்கும் வரலாறு அது. அந்த வரலாற்றை வளரும் சிறார்களுக்குச் சொல்ல நினைத்தார் தோசி. பெரியவர்கள்தான் எல்லா அழிவுகளையும் அவல வரலாறுகளையும் சலனமின்றிக் கடந்து விடுகிறார்களே! 'போரின் கொடுமையைக் குழந்தைகள் புரிந்துகொள்வதுதான் இந்தப் பூவுலகின் எதிர்காலத்துக்குப் பாதுகாப்பு' என்று கருதினார் தோசி. Hiroshima No Pika என்ற புத்தகத்தைச் சிறுவர்களுக்காக எழுதினார். Pika என்பது தீப்பிழம்பு வெளிச்சத்தைக் குறிக்கும் ஜப்பானியச் சொல்.



தோசி சொன்னார்: ''எனக்கு 70 வயதாகிறது. எனக்குக் குழந்தைகளும் கிடையாது; பேரக்குழந்தைகளும் கிடையாது. உலகெங்கும் உள்ள குழந்தைகளை என் பேரக் குழந்தைகளாக எண்ணி அவர்களுக்காக இந்தப் புத்தகத்தை எழுதி இருக்கிறேன். சிறிய புத்தகம். ஆனால் எழுதி முடிக்க நீண்ட நாட்கள் ஆகிவிட்டன.''

குழந்தைகளுக்கான புத்தகங்களில் மிக அரிய புத்தகம் Hiroshima No Pika. மாயி–சான் என்ற பெயரில், கொ. மா.கோ.இளங்கோவின் அற்புதமான மொழிபெயர்ப்பில் இப்புத்தகத்தைத் தமிழில் தந்துள்ளது பாரதி புத்தகாலயம்.

புத்தகத்தின் சுருக்கம் இது:

ஜப்பானின் ஹிரோஷிமா, ஏழு நதிகள் பாயும் நகரம். இரண்டாம் உலகப் போர் தொடங்கியதிலிருந்து, ஏதோ ஒரு அசம்பாவிதத்தை ஹிரோஷிமா மக்கள் எதிர்பார்த்தபடியே இருந்தார்கள். பழைய கட்டடங்களைத் தகர்த்து தெருக்களை அகலமாக்கினார்கள். வீடுகளில் போதுமான தண்ணீர் நிரப்பி வைத்தார்கள். எப்போதும் சிறு பையில் மருந்துப் பொருள்களை எடுத்துச் சென்றார்கள். இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எல்லாம் தாண்டி அவர்கள் தலையில் விழுந்தது அந்த அணுகுண்டு. அந்த அணுகுண்டின் பெயர் 'குட்டிப் பையன்' என்பது கொடூர முரண்!

துடிப்பான ஏழு வயதுச் சிறுமி 'மீ'. அவள் முழுப் பெயர் மீ சான். 'மீ' என்பது ஜப்பானில் அழகுக்கு அடைமொழி. 1945 ஆகஸ்ட் 6 அன்று காலை 8.15 மணிக்கு அம்மா அப்பாவோடு அமர்ந்து இனிப்பு உருளைக்கிழங்கை ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் மீ.

அப்போதுதான் முன்னர் விவரித்த அந்தச் சம்பவம் நடந்தது. ஆரஞ்சு நிற தீப்பிழம்பு வெளிச்சம்! தொடர்ந்து வீடுகள் குலுங்கி நொறுங்கின. என்ன நடக்கிறது என்பதறியாமல் மயங்கி விழுந்தாள் மீ.

அவள் மயக்கம் தெளிந்து மெல்லக் கண் விழித்தபோது, ஒரே இருட்டு. இருளைத் துளைத்து அம்மாவின் சத்தம், ''மீ... மீ... மீ..!''

தன்மேல் விழுந்து கிடந்த பலகைகளைத் தள்ளிவிட்டு எழுவது சிறுமிக்குச் சிரமமாக இருந்தது. அம்மாவின் குரல் மீண்டும். ''மீ! எழுந்திரு. இங்கிருந்து வேகமாகப் போகவேண்டும். அப்பா நெருப்புக்குள் சிக்கிக் கிடக்கிறார்.''

சொல்லிவிட்டு அம்மா சும்மா நிற்கவில்லை. நெருப்புக்குள் பாய்ந்தார். கணவரை மீட்டெடுத்து வந்தார். தன் மேலாடையான கிமோனாவைக் கிழித்து அவர் காயங்களை மறைத்துக் கட்டினார். அப்புறம் அவர் செய்ததுதான் அற்புதம்!

காயம்பட்டு நினைவிழந்து கிடந்த கணவரைத் தன் முதுகில் தூக்கிக்கொண்டார். ஒரு கையில் மகள் மீயைப் பிடித்துக் கொண்டார். ''வா! நாம் ஆற்றை அடையவேண்டும்.''

மூவரும் ஆற்றங்கரையில் போய் விழுந்தார்கள். தண்ணீரில் நனைந்தார்கள். ஆற்றங்கரையில் ஏராளமான மக்கள் கூட்டம். உடை எரிந்து, கண்ணிமைகளும் உதடும் எரிந்து கோரமான தோற்றத்தில் குழந்தைகள்; பலர் மூச்சற்றுக் கீழே விழுந்து கிடந்தார்கள். அவர்கள்மீது மற்றவர்கள் தடுமாறி விழுந்தார்கள். எங்கே பார்த்தாலும் மனிதக் குவியல்! பிணக்குவியல்!

அசைவற்றுக் கிடந்த மீயின் காலுக்குக் கீழே ஏதோ ஓர் அசைவு. மீ கவனித்தாள். இறகுகள் எரிந்து பறக்கமுடியாமல் தத்தி நடந்து கொண்டிருந்தது ஒரு சிறு பறவை. மீ ஆற்றைப் பார்த்தாள். ஆற்றில் ஒரு மனிதனின் பிணம்; தொடர்ந்து ஒரு பூனையின் பிணம்; தொடர்ந்து தொடர்ந்து பிணங்கள்!


ஆகாயம் இருண்டு கிடந்தது. இடி இடித்தது. இது கோடைக் காலம்தான். ஆனால், இதுவரை அனுபவித்திராத கடுங்குளிர் நிலவியது. பெரும் மழை பெய்தது. இதுவரை பார்த்திராத கறுப்பு மழை!

கணவரை முதுகில் சுமந்தபடி, மகளைக் கையில் பிடித்தபடி, ஒவ்வோர் ஆறாக ஏறி இறங்கினார் அந்தத் தாய். ஒரு ஆற்றங்கரையில் சோர்ந்து விழுந்தார்கள். அசதியில் தூங்கினார்கள். ஆகஸ்ட் 6-ம் தேதி விழுந்தவர்கள், 9-ம் தேதி அன்றுதான் விழித்தார்கள். அவர்கள் விழித்துப் பார்த்த அந்த 9-ம் தேதியில்தான் நாகசாகியில் அணுகுண்டு விழுந்து ஏராளமானவர்கள் மடிந்தனர். ஆனால், எதையும் அறிந்துகொள்ள முடியாத சோர்விலும் களைப்பிலும் அவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் விழித்தபோது அருகில் ஒரு பாட்டி இருந்தாள். அந்தப் பாட்டி மீயைப் பிரியத்தோடு பார்த்தாள். தன் கையிலிருந்த அரிசி உருண்டையை சிறுமி 'மீ'க்குக் கொடுத்தாள் பாட்டி. அடுத்த கணம் பாட்டி சரிந்து விழுந்து இறந்தாள்.

அந்த அரிசி உருண்டையை மீயால் உண்ண முடியவில்லை. விரல்கள் எரிந்து ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருந்தன. குண்டு விழுந்த நேரத்தில், இனிப்பு உருளைக்கிழங்கை உண்பதற்காக அவள் தன் கையில் வைத்திருந்த குச்சிகளும் (Chopsticks) இன்னும் விரல்களுக்குள் சிக்கிக் கிடந்தன. மீ அழ அழ, அவள் விரல்களைப் பிரித்து, அக்குச்சிகளை அம்மா எடுத்தார்.

**இது கோடைக் காலம்தான். ஆனால், இதுவரை அனுபவித்திராத கடுங்குளிர் நிலவியது. பெரும் மழை பெய்தது. இதுவரை பார்த்திராத கறுப்பு மழை!**




தீயணைப்பு வீரர்கள் வந்து காயம்பட்டவர்களை ஒரு பள்ளி வளாகத்தில் சேர்த்தனர். இடையில் ஒருநாள் மீயும் அம்மாவும் தங்கள் வீட்டைப் பார்க்க வந்தனர். அது அடையாளம் தெரியாமல் நொறுங்கிப் போயிருந்தது.

நாட்கள் நகர்ந்தன. மீயின் தந்தை உடலில் பல காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஆறுவது போலிருக்கும். அடுத்த நாளே மீண்டும் புண்ணாகி, தாங்கமுடியாத வலி தரும். அவருடைய தலைமுடி கொட்டிவிட்டது. அடிக்கடி ரத்த வாந்தி வேறு எடுத்தார்! உடம்பெல்லாம் கருஞ்சிவப்புப் புள்ளிகள். அவர் அதிக நாள் வாழவில்லை.

சிறுமி மீக்கு நிகழ்ந்தது பெருங்கொடுமை! அவள் ஏழு வயதில் இருக்கும்போது இந்தத் துயரம் நிகழ்ந்தது. அதன்பிறகு பல ஆண்டுகள் மீ வாழ்ந்தாள். ஆனால், அவள் வளரவே இல்லை. ஏழு வயதுச் சிறுமியின் உயரத்திலேயே மிச்சமிருந்த ஆண்டுகளையும் அவள் வாழ்ந்து முடித்தாள். இது என்ன நோய்? அணுகுண்டு கொண்டு வந்த பல நோய்களுக்குப் பெயரில்லை. திடீர் திடீரென மீயின் மண்டையோட்டில் சிறு சிறு கண்ணாடிச் சில்லுகள் கிளம்பி வரும். கண்ணீரோடு அவற்றை எடுப்பார் அம்மா.

அணுகுண்டுக்குத் தப்பித்த ஜீவன்களும் ஒருநாளும் நிம்மதியாக வாழவில்லை.

உலகெங்கும் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு வகுப்பறையும் வாசிக்கவேண்டிய புத்தகம் இது.

வளரும் சிறார்களுக்கு (7 வயது முதல் 12 வயது வரை) கதைகள் மட்டும் சொல்வது போதாது. இத்தகைய துயர வரலாறுகளையும் சொல்ல வேண்டும். (ஜாலியன்வாலா பாக், காந்தி கொலை என நமக்கும் சொல்லப் பல வரலாறுகள் உண்டு.) குழந்தைகள் இந்த வரலாறுகளை வறட்டுத்தனமான பாடப் புத்தக மொழியில் படித்து என்ன பயன்? 'ஹிரோஷிமா மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டின் பெயர் என்ன' என்ற கேள்விக்கு விடையை மனப்பாடம் செய்வதோடு முடிந்து போகும் தொடர்பு அது!

பாடப் புத்தக மொழியில் அல்ல, சிறுவர் மொழியில் வரலாறுகள் வேண்டும். அதற்கு முன்னுதாரணம் Hiroshima No Pika.


மக்களின் பேராதரவுடன்...
191 திரையரங்குகளில்
2D ENTERTAINMENT
சூர்யா வழங்கும்
SAKTHI FILM FACTORY RELEASE
25 வது நாள்
கார்த்தி நடிக்கும்
கடைக்குட்டி சிங்கம்
எங்கள் வீட்டு பிள்ளை
Ⓤ
பாண்டிராஜ்
R.வேல்ராஜ் D.இமான் K.வீரசமர் B.F.A., ரூபன்
யுகபாரதி திலிப் சுப்பராயன் பிருந்தா, பாஸ்கர் ராஜாகிருஷ்ணன் பூர்ணிமா ராமசாமி
நட்ராஜ் விஜி RED DOT பவன் SYNC CINEMA B.செந்தில்குமார் முருகன் ஜான்சன்
இணை தயாரிப்பு ராஜ்சேகர் கற்பூரசுந்தரபாண்டியன்
SONY MUSIC
தயாரிப்பு சூர்யா
KNACK STUDIOS
சத்யம்
எஸ்கேப்
தேவி
ஐநாக்ஸ்
ஆல்பர்ட்
அபிராமி
சங்கம்
பிவிஆர்
பிளாசோ
எவினம் ராஜேஸ்வரி
உதயம்
பெரம்பூர் எஸ்2
தி.நகர் ஏஜிஎஸ்
தண்டையார்பேட்டை எம்எம்
அயனாவரம் கோபிகிருஷ்ணா
ஓ.எம்.ஆர். ஏஜிஎஸ்
வில்லிவாக்கம் ஏஜிஎஸ்
திருவான்மியூர் எஸ்2 தியாகராஜா
காசாத்தூர் மாயாஜால்
வேளச்சேரி ஜாஸ் சினிமாஸ்
வேளச்சேரி பிவிஆர் கிராண்ட்
பல்லாவரம் பிவிஆர் கிராண்ட்
விருகம்பாக்கம் ஐநாக்ஸ் நேஷனல்
தாம்பரம் எம்.ஆர்.
அனகாபுத்தூர் அருமதி
அனகாபுத்தூர் வேல்கோ பட்டு
திருநின்றவூர் வேலா ஸ்கிரீன்-1
கோயம்பேடு ரோகினி
காஞ்சிபுரம் அருணா
மாமண்டூர் சி3
குரோம்பேட்டை வெற்றி
கொளத்தூர் கங்கா சினிமாஸ்
போரூர் ஜி.கே. சினிமாஸ்
திருவொற்றியூர் எம்.எஸ்.எம்.
பாடி சிவசக்தி
அம்பத்தூர் ராக்கி
அம்பத்தூர் முருகன்
ஆவடி மீனாக்ஷி
திருவள்ளூர் ராக்கி
காஞ்சிபுரம் பாபு- மெயின் ஸ்கிரீன் பாபு
பூந்தமல்லி சுந்தர்
பூந்தமல்லி விக்னேஷ்வரா
உள்ளகரம் குமரன்
திருத்தணி துர்கா
செங்கல்பட்டு லதா
நங்கநல்லூர் வெற்றிவேல்
காசி டாக்கீஸ்
பொன்னேரி வெற்றிவேல் முருகன்
ரெட்ஹில்ஸ் அம்பிகா
வேலூர் லக்ஷ்மி
வேலூர் விஷ்ணு எஸ்2
திருவண்ணாமலை பாலசுப்-காம்ப்ளக்ஸ்
குடியாத்தம் கங்கா காம்ப்ளக்ஸ்
ஆர்காடு லக்ஷ்மி எஸ்2
வாணியம்பாடி விஜய்
ஆம்பூர் சாய் குமரன்
திருப்பத்தூர் சிகேசி
திருப்பத்தூர் ராமஜெயம்
ஆரணி லக்ஷ்மி
செய்யூர் செல்லம் பாரடைஸ்
அரக்கோணம் சிந்து
வேலூர் சிலம்பு
ஜோலார்பேட்டை மஞ்சு
பாண்டி ருக்மணி
கடலூர் நியூ சினிமா
விழுப்புரம் ஜனாஸ்
கள்ளக்குறிச்சி ராஜா
திருக்கோயிலூர் தேவி
சேத்தியாத்தோப்பு வாசவி
வடலூர் முருகா
சங்கராபுரம் பார்கத்
சிதம்பரம் வடுகநாதன்
பண்ருட்டி ஐயராம்
திண்டிவனம் எம்.ஆர்.எஸ்.
சின்ன சேலம் செங்குந்தர்
சேலம் ஏ.ஆர்.ஆர்.எஸ். மல்ட்டிப்ளெக்ஸ்
சேலம் ரமணா
சேலம் ஓரியண்டல் சக்தி
கரிமங்கலம் ஸ்ரீ பாக்கியலக்ஷ்மி
தர்மபுரி ஹரி
ஆத்தூர் என்.எஸ்.
ராசிபுரம் சாமுண்டி
குருசாமிபாளையம் ஜயலக்ஷ்மி
நாமகிரிபேட்டை ஆர்.எஸ்.
திருச்செங்கோடு மலைஅரசன்
முகப்பேர் பாலசுப்பிரமணிய
பாப்பாரப்பட்டி கஸ்தூரி
பள்ளிபாளையம் ஜயலக்ஷ்மி
குமரபாளையம் சரஸ்வதி
ஓசூர் ஸ்ரீ ராகவேந்திரா
தர்மபுரி சந்தோஷ்
காவேரிப்பட்டினம் ரவி
எடப்பாடி குமரன்
ராயகோட்டை காமராஜ்
பர்கூர் துரைசாமி பாரடைஸ்
வேலூர் அபிராமி
எக்கம்பிள்ளை காந்தன்
நாமக்கல் எஸ்.எம்.ஆர்.
திருச்சி எஸ்.ஏ. சினிமாஸ்
திருச்சி சோனா
திருச்சி விஜய சினிமாஸ்
திருச்சி ஊர்வசி
தஞ்சாவூர் ஜுபிட்டர்
தஞ்சாவூர் ஜி.வி.காம்ப்ளக்ஸ்
கரூர் கலையரங்கம்
கரூர் அஜந்தா
கும்பகோணம் வாசு
மாயவரம் ரத்னா
புதுக்கோட்டை சாந்தி
புதுக்கோட்டை அய்யா
திருவாரூர் சோழா
காரைக்கல் எஸ்.ஏ. சினிமாஸ்
குளித்தலை பாலாம்பிகை
சீர்காழி ஓ.எஸ்.எம்.
பெரம்பலூர் சாமி
அரியலூர் மஹாசக்தி
பேராவூரணி அதுமுத்து சரோஜா
கோயம்புத்தூர் தீ சினிமாஸ்
கோயம்புத்தூர் சினி போலிஸ்
கோயம்புத்தூர் கே.ஜி. சினிமாஸ்
குமரன், கோயம்புத்தூர்
கோயம்புத்தூர் காவேரி
கோயம்புத்தூர் நாஸ்
கோயம்புத்தூர் தர்ஷனா
சிங்காநல்லூர் அம்பாள்
நீலாம்பூர் மஹாராஜா
ஈரோடு மஹாராஜா
ஈரோடு தேவி அபிராமி
ஈரோடு சங்கீதா
திருப்பூர் ஸ்ரீசக்தி
திருப்பூர் தமிழ்நாடு
திருப்பூர் சிவன்
திருப்பூர் உஷாமணி
திருப்பூர் காசி
திருப்பூர் கே.எஸ்.
பொள்ளாச்சி தொரைஸ்
புளியம்பட்டி ஸ்ரீ தேவி சினிமாஸ்
சோமனூர் மீனாம்பிகா
பல்லடம் ஜி.பி. டீலக்ஸ்
பெருந்துறையூர் விஜயன்
தாராபுரம் எஸ்.வி. விசுவல்ஸ்
பி.என்.பாளையம் லக்ஷ்மி
கோட்டூர் வள்ளியம்மாள்
ஆலந்துறை சக்திவேல்
வெள்ளகோவில் வீரகுமார்
அவல்பூந்துறை தங்கம்
உ.கோவைத்துபாளையம் கிருஷ்ணா
திருநெல்வேலி ராம் சினிமாஸ்
திருநெல்வேலி பி.வி.டி.
நாகர்கோவில் சக்கிரவர்த்தி காம்ப்ளக்ஸ்
நாகர்கோவில் வசந்தம் பேலஸ
தூத்துக்குடி கிளியோபாட்ரா
தென்காசி பிஎஸ்எஸ் மல்ட்டிப்ளக்ஸ்
கோவில்பட்டி சத்யபாமா
அம்பை பாலாஜி
சங்கரன்கோவில் கோமதி சங்கர்
சுரண்டை நடராஜ்
ஆலங்குளம் டி.பி.வி. மல்ட்டிப்ளக்ஸ்
புளியங்குடி கன்னா
குளித்துறை லக்ஷ்மி
ஆறுமுகநேரி தங்கம்
மதுரை வெற்றி
மதுரை தமிழ்ஜயா
அருப்புக்கோட்டை தமிழ்மணி
திருநகர் மணி இம்பாலா மெலோடிஸ்
மதுரை ஐநாக்ஸ்
திண்டுக்கல் கார்னிவல் ஆர்த்தி
திண்டுக்கல் நாகா
சிவகாசி தங்கமணி
காரைக்குடி நட்ராஜா
பழனி சினிவள்ளுவர்
கும்பம் சக்திபாலா
உசிலம்பட்டி கண்ணன்
ஸ்ரீவில்லிபுத்தூர் ரேவதி
சின்னமனூர் பொன்னுசாமி
அலங்காநல்லூர் முனீஸ்வரன்
கடலூர் எஸ்.டி.பி.
மதுரை மினிப்ரியா
மதுரை ஷண்முகா
விருதுநகர் அப்சரா
போடி ஆரா சினிமாஸ்
ஒட்டன்சத்திரம் இந்தியன்
பத்தலைண்டு கோவிந்தசாமி
திருமங்கலம் ஆனந்தா
ராஜபாளையம் மீனாக்ஷி
மதுரை தங்கரீகல்
தேனி பாத்திமா
பெரியகுளம் பார்வதி
மேலூர் கணேஷ்
ராம்நாட் ஜகன்
தல்லாப்புரம் கிருஷ்ணா

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050. Day of Publishing: 01-08-2018







மதிப்பிற்குரியவர்களுக்கு...

RAMRAJ ©

காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in

கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்

**Follow us** RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia